பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 19 வெள்ளிக்கிழமை (04.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 39

### அரசு போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகிவிட்டாலும்

# புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு நிபந்தனை இன்றிப் பேசுவதற்கு வரலாமாம்!

கொழும்பு, ஜனவரி 04

**போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசு விலகியுள்ள போதிலும், அமைதிப் பேச்சுக்கான கதவு திறந்தேயுள்ளது. ஆனால் அப்படிப் பேச்சு நடத்துவதாயின் புலிகள் வன்முறைகளைக் கைவிட்டு, ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு, நிபந்தனை ஏதும் முன்வைக்காமல் அதற்கு வரவேண்டும்.**

**- இவ்வாறு இலங்கை அரசு தெரிவித்திருக்கின்றது.**

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் பிரியதர்ஷன யாப்பா இதனை நேற்றுத் தெரிவித்தார்.

புலிகள் தற்சமயம் வன்முறைகளில் ஈடுபட்டிருப்பதால் அவர்களுடன் இப்போது பேசிப்பலன்எதுவும்கிடைக்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளுக்கும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தால் இந்நாட்டுக்கு நன்மைகள் எவையும் கிட்டவில்லை.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாள்முதல் இன்றுவரை புலிகள் அந்த ஒப்பந்தத்தை மீறியே வந்துள்ளனர். தங்களின் வன்முறை நடவடிக்கைகளுக்கு சாதகமாகவே அவர்கள் அந்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தினர்.

அந்த ஒப்பந்தத்துடன் அரசு ஒத்துப் போவதால் நாட்டுக்கு எந்தவித நன்மையும் இனிக் கிடைக்கப்போவதில்லை என்று அரசு உணர்ந்ததால் அதிலிருந்து விலகத் தீர்மானித்து விலகிவிட்டது.

அரசின் இம்முடிவு குறித்து சமாதான அனுசரணையாளர்களான நோர்வேக்கும் யிற்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் அறிவிக்கப்படும்.

இருப்பினும் அமைதி முயற்சியில் இருந்தும் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டுவது என்ற நிலைப்பாட்டில் இருந்தும் அரசு விலகவில்லை.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் முடிவு நோர்வேக்குத் தெரிவிப்பு போர்நிறுத்தம் தைப்பொங்கலுடன் 'அவுட்'!

கொழும்பு, ஜன. 04

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவது என்ற தனது முடிவை இலங்கை அரசு நேற்று உத்தியோக பூர்வமாக அனுசரணைத் தரப்பான நோர்வேக்கு அறிவித்தது.

கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ட்ரோ ஹத்ரமை நேற்று மாலை 4.30 மணிக்கு கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்துக்கு நேரடியாக அழைத்து, இலங்கை அரசின் முடிவை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

### இந்தியத் தூதருக்கும் அறிவிப்பு

இதேவேளை, நோர்வேத் தூதரை நேற்று அழைத்துப் பேசுவதற்கு முன்னர் இந்தியத் தூதுவரையும் அழைத்து, அவருக்கும் இலங்கை அரசின் முடிவை போகொல்லாகம தெரியப்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் மூலம் ஒஸ்லோ அரசுக்கு இத்தகவல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி, இவ்வாறு ஒப்பந்தத்திலிருந்து விலகும் அறிவிப்பை சம்பந்தப்பட்ட தரப்புகளில் ஒன்று வெளியிட்டதில் இருந்து பதினான்கு நாட்களில் ஒப்பந்தம் செயலிழக்கும்.

நேற்று அத்தகைய முடிவை இலங்கை அரசு, அனுசரணைத் தரப்புக்குத் தெரியப்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.செயலாளர் ஆழ்ந்த கவலை

வடக்கிலே சண்டையும், தலைநகர் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வன்செயலும் தீவிரமடைந்திருக்கும் இச்சமயத்தில் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசு விலகுவது குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆழ்ந்த கவலை வெளியிட்டிருக்கின்றார்.

பொதுமக்கள் பாதுகாக்கப்படுவதையும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதையும் சம்பந்தப்பட்ட தரப்புகள் உறுதிப்படுத்த வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் கோருகின்றார் என அவரின் பேச்சாளர் தெரிவித்

## இந்த முடிவு கடுமையானது எரிக் சொல்ஹெய்ம் கவலை

கொழும்பு, ஜன.04

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவது என்ற இலங்கை அரசின் முடிவைக் கடுமையான நடவடிக்கை எனக் குறிப்பிட்டு அதற்குத் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார் இந்த ஒப்பந்தம் கைச் சாத்தாவதற்கு முக்கிய பங்காற்றிய நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம்.

நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் எரிக்சொல்ஹெய்ம்.

இதேவேளை, போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசு விலகியுள்ளதைத் தொடர்ந்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவை மீள அழைத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச செய்திச் சேவையொன்றுக்கு

(02 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்று உக்கிரச் சண்டை

கொழும்பு . ஜன.04

மன்னார் மேற்கை அண்டிய பாலைக்குழி அணைக்கட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை முதல் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று அறியவந்திருக்கிறது. எனினும், வழமைபோல் இரு தரப்பினரும் இந்த மோதல் தொடர்பில் முரண்பட்ட தகவல்களை தெரிவித்திருக்கின்றனர்.

அதிகாலை 5.30 மணியளவில் அந்தப் பகுதியிலிருந்து படையினர் ஆட்லறிகள், மோட்டார்கள், பல்குழல் ஏவுகணைகள் மற்றும் எறிகணைகள் சகிதம் முன்னேறி வந்தனர் என்றும், இவர்களின் முன்னேற்றத்திற்கு முகம்கொடுத்து, கடும் எதிர்த் தாக்குதலை நடத்திய தமது போராளிகள், அரச படையினரின் முன்னேற்ற நடவடிக்கையை வெற்றிகரமாக முறியடித்திருக்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## 10 பேர் கைதாகி தடுப்புக்காவலில்

கொழும்பு, ஜன. 04

மகேஸ்வரன் எம்.பியின் படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் ஒன்பது பேரை கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர்களையும், ஏற்கனவே காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் மற்றொரு சந்தேக நபரையும் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அதேசமயம், தாம் சுடப்படுவதற்கு இரு நாட்களுக்கு முன்னர், 'சக்தி' தொலைக்காட்சியின் 'மின்னல்' நிகழ்ச்சியில் மகேஸ்வரன் எம்.பி. தம்மைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளோர் குறித்து குறிப்பிட்ட தகவல்களை கவனத்தில் எடுத்து அந்தக் கோணத்திலும் விசாரணைகளைத் தொட

(02 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரம் பேர் திரண்டு அஞ்சலி செலுத்த மகேஸ்வரனின் புகழுடல் தீயுடன் சங்கமம்

கொழும்பு, ஜனவரி 04

புத்தாண்டு தினத்தன்று சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட மகேஸ்வரன் எம்.பியின் பூதவுடல் நேற்றுமாலை பல்லாயிரக்கணக்கானோர் இன,மத, மொழி பேதமின்றி அணிதிரண்டு அஞ்சலி செலுத்த கொழும்பு கனத்தை மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புகளைச் சேர்ந்தோர் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்ட மகேஸ்வரனின் இறுதி ஊர்வலம் நேற்றுப் பிற்பகல் அன்னாரின் வெள்ளவத்தை இல்லத்தில் இருந்து தொடங்கியது.

முன்னதாக வெள்ளவத்தை இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் பூதவுடலுக்குப் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்களும் பிரமுகர்களும் நேரில்வந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். மந்திரம் ஓத, தேவாரம் ஒலிக்க அன்னாரின் இறுதிச் சமயக்கிரியைகள் வெள்ளவத்தையில்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அழுக்கவெடியில் லொறி சிக்கியது மணலாறில் 3 படையினர் பலி

கொழும்பு, ஜன. 04

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறமான கெப்பிற்றிக்கொல்லாவைக்கு அருகே மணலாறு (வெலிஓயா) பிரதேசத்தில் யக்காவெவ - பதவியா வீதியில், சிங்கயாயுள்பத்த என்ற இடத்தில் படையினரின் லொறி ஒன்று நேற்றுக்காலை 9 மணியளவில் அமுக்க வெடியில் சிக்கி[illegible]

(02 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமரர் மகேஸ்வரனின் இறுதி யாத்திரையின்போது....











## அழுக்கவெடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலேயே உயிரிழந்தனர்; மேலும் நான்கு படையினர் படுகாயமடைந் தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இரு படையினர் கெப்பிற்றிக்கொல்லாவ பொது வைத்தியசாலையிலும் ஏனைய இரு படையினரும் அநுராதபுர பொது வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் இராணுவத்தினர் கடும் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (சி)

## ஐ.நா. செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார் என்றும் அவரின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## பல்லாயிரம் பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற நிலையில் பூதவுடல் தாங்கிய பேழை பிற்பகல் அவரது இல்லத்திலிருந்து ஊர்வலமாக கனத்தை மயானம் நோக்கிக் கொண்டு வரப்பட்டது.

அன்னாரின் இல்லத்திலிருந்து திரண்டு வந்தவர்கள், இடைநடுவில் கலந்துகொண்டவர்கள் என ஆயிரக்கணக்கானோரால் இந்த ஊர்வலம் நிறைந்தது.

ஐ.தே.க. உறுப்பினர்கள், அன்னார் கல்விகற்ற யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவர்கள் ஆகியோரால் மாறி மாறி தோளில் பேழையில் கொண்டுவரப்பட்ட அன்னாரின் பூதவுடல் கனத்தை மயானத்தை மாலை 4.30 மணியளவில் வந்தடைந்தது.

ஏற்கனவே கனத்தையில் கூடிநின்ற மேலும் ஆயிரக்கணக்கானோரும் அங்கு இணைந்து மயானத்தில் வைத்து தமது இறுதி அஞ்சலிகளை மகேஸ்வரன் எம்.பிக்கு கண்ணீருடன் காணிக்கையாக்கினர்.

அரசியல் பிரமுகர்களின் இரங்கலுரைகளை அ[illegible] தையின் [illegible] (உ - ஏ)

## காரைநகரிலும் அஞ்சலி

காரைநகர்,ஜன.04

படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் அவரது சொந்த ஊரான காரைநகரிலும் நேற்று இடம்பெற்றன.

காரைநகர் பிரதேசம் எங்கும் சோகமயமாகக் காட்சியளித்தது. சகல வர்த்தக நிலையங்களும் அங்கு மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், பொது நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

ஈழத்துச் சிதம்பரத்திலும் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயத்திலும் விசேட ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. ஊரெங்கும், வீதிகளில் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. மகேஸ்வரனின் வீட்டிலும் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

## இந்த முடிவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளித்துள்ள செவ்வியிலேயே சொல்ஹெய்ம் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

மோதலில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரதும் நம்பிக்கையை கொண்டிருக்கும் வரையில் அனுசரணையாளராக பணியாற்ற நோர்வே தயார் எனவும் இந்த செவ்வியின் போது அவர் அறிவித்தார்.

விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பார்கள் என்ற நம்பிக்கையை அவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு வெளியே இந்த விடயத்திற்கு பேச்சு மூலமாகத்தான் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. அவர்கள் வெகு விரைவில் பேச்சுகளுக்குத் திரும்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மிகக் கொடூரமான வன்முறைகள் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கை கைவிடப்பட்டமை மேலும் வன்முறைகளும் மோதல்களும் அதிகரிக்கும் நிலையை உருவாக்கும் எனத் தான் கவலை கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விலக்கப்படுவது பொதுமக்களைப் பாதுகாக்கும் முயற்சிகளை பலவீனப்படுத்தும் எனவும், இரு தரப்பும் கேட்டுக் கொள்ளும் வரை தங்களால் புதிய முயற்சி எதனையும் மேற்கொள்ள முடியாது எனவும் நோர்வே அறிவித்துள்ளதாகவும் நோர்வேயின் அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது. (உ)

## மன்னாரில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர் என்றும் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

முற்பகல் 11 மணிவரை நீடித்த இந்த மோதலில் பத்துப் படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும், 15 இற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்திருக்கின்றனர். தமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை என்றும், மோதலின் பின்னர் படையினர் பழைய நிலைகளுக்குப் பின்வாங்கி ஓடிவிட்டனர் என்றும் புலிகள் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, இந்த மோதலில் ஆறு விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்திருக்கின்றனர்,மேலும் 12 பேர் காயமடைந்திருக்கின்றனர் என்று படைத் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

அத்துடன், தமது தரப்பில் படைவீரர் ஒருவர் உயிரிழந்ததுடன் 6 பேர் வரை காயமடைந்தனர் என்றும், விடுதலைப் புலிகளின் 6 பதுங்கு குழிகள் மோதலில் தாக்கியழிக்கப்பட்டன என்றும் படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை பெப்ரவரி மாதமளவில் அரசிற்குக் கிடைக்கும். அவ்வறிக்கையின்படி தேசிய பிரச்சினைக்கு நல்லதோர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும்.

பேச்சுக்கான கதவை அரசு இன்னும் திறந்தேதான் வைத்துள்ளது. ஆனால், புலிகள் தற்போது வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதால் இந்த நிலையில். அவர்களுடன் பேசிப் பயனில்லை.

அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு, நிபந்தனைகளற்ற முறையில் பேச்சுக்கு வந்தால் அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

நாட்டையும் நாட்டு மக்களையும் புலிகளின் பயங்கரவாதத்தில் இருந்து மீட்க வேண்டியது அரசின் கடமை.அந்தக் கடமையை அரசு முழுமையாக நிறைவேற்றும் - என்றார் அ வர். (அ-சி)

## 10 பேர் கைதாகி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருமாறு நீதிவான் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

கொலையாளிகள் குறித்து மகேஸ்வரன் முற்கூட்டியே வழங்கிய தகவல்களைக் கொண்டு தேவையான விசாரணைகளை நடத்தி சந்தேக நபர்களைக் கைது செய்யவும் அவர் பணித்தார்.

இந்த விவ்காரம் நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மகேஸ்வரனின் உறவினர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எல். எம். அமீன், சட்டத்தரணிகள் ஜே. எஸ். இரத்தினவேல், நிரோஜன் பெர்னாண்டோ போன்றோர் ஆஜரானார்கள்.

அவர்கள் பின்வருமாறு நீதிமன்றில் கருத்துத் தெரிவித்தனர்:-

இந்தப் படுகொலைச் சம்பவம் நடந்த உடனேயே - சரியான விசாரணைகள் பூர்த்தியடைய முன்னரே - புலிகளே இக்கொலையைச் செய்தனர் என்று பொலிஸ் மா அதிபர் ஒரு முடிவுக்கு வந்தவர்போல அறிவித்தமை பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. முழு உண்மையும் மறைக்கப்படலாம் என்ற அச்சம் எமக்குத் தோன்றியுள்ளது. இவ்விடயத்தைக் குழப்பியடிக்கும் முயற்சிகள் நடக்கின்றனவோ என எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

### மரண வாக்குமூலமாகக் கருதக் கோரிக்கை

மகேஸ்வரன் இறப்பதற்கு முன்னர் தம்மைக் கொல்லத் திட்டமிடுபவர்கள் குறித்து 'சக்தி' தொலைக்காட்சியின் 'மின்னல்' நிகழ்ச்சியில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதை அவரது மரண வாக்குமூலமாகக் கருதும்படி வேண்டுகிறோம்.

இக்கொலையைச் செய்தவர் என்று கருதப்படும் பிரதான சந்தேக நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் அவரை ஒரு நீதிவான் முன் ஆஜர் செய்து நீதியான விசாரணை ஒன்றைத் தொடர்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் மர்மமான செயற்பாடுகளில் ஈடுபடுவது பலத்த சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. - என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

அவர்களது வாதத்தை செவிமடுத்த நீதிவான் 'மின்னல்' நிகழ்ச்சி தொடர்பான பதிவுகளைப் பெற்று, அதில் மகேஸ்வரன் கூறிய கருத்துக்களைக் கவனத்தில் எடுத்து, விசாரணை நடத்துமாறு பொலிஸாருக்குப் பணித்தார்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் பிரதான சந்தேகநபரின் வங்கிக்கணக்குகளை விசாரித்து ஆராய்வதற்கு தங்களுக்கு அனுமதியளிக்கும் உத்தரவை பொலிஸார் கோரினர். அதற்கான உத்தரவையும் நீதிமன்றம் விடுத்தது.

அதேநேரம் படுகொலைச்சம்பவம் நடந்த இடத்திலிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கியில் சிந்தியுள்ள இரத்தத்துடன் ஒப்பிடுவதற்காக சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளைப் பெற்று மரபணுப் பரிசோதனை நடத்துவதற்கு அனுமதி தருமாறு கொட்டாஞ்சேனைப் பொலிஸார் விடுத்த கோரிக்கையை ஏற்று நீதிவான் அதற்கான உத்தரவையும் விடுத்தார்.

இந்த விவகாரம் பற்றிய விசாரணைகளின் விவரம் குறித்து எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கவும் பொலிஸாரைப் பணித்தார் நீதிவான். (உ-06)

## அரசின் முடிவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியிருப்பதால் சரியாகப் பதின்னான்கு நாட்களில் - அதாவது தைப்பொங்கலுக்கு அடுத்த நாளுடன் - ஒப்பந்தம் முழு அளவில் செயலிழந்து ரத்தாகும் எனக் கருதப்படுகின்றது.

இலங்கை அரசின் இந்த முடிவை நோர்வே விரைவில் விடுதலைப் புலிகள் தரப்புக்கும் உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தும் என்றும்-

இலங்கை அரசின் முடிவிற்கமைய ஒப்பந்தம் ரத்தாவதால்; அந்த ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை விலக்க நோர்வே உடன் நடவடிக்கை எடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை -

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகும் அரசின் முடிவு குறித்து வெளிவிவகார அமைச்சர் நேற்று இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டு இணைத் தலைமைகளுக்கு விளக்கமளித்தார்.

நோர்வேத் தூதரை நேற்று மாலை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்துப் பேசிய பின்னர், இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கொழும்புத் தூதுவர்களை அழைத்து வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இந்த விளக்கத்தை அளித்தார் எனத் தெரியவந்தது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாய் மேற்கு கொள்ளை தொடர்பாக கைதான மூவருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை,ஜன.4

இரவு வேளையில் வீடொன்றினுள் புகுந்து இராணுவம் போன்று நடித்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண் உட்பட நால்வர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இன்னொரு சந்தேக நபரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

அல்வாய் மேற்கு, அல்வாயைச் சேர்ந்த சதாசிவம் ரவீந்திரன் என்பவரது வீட்டிற்கு பயங்கர அயுதங்களுடன் இரவு வேளையில் அத்துமீறிப் புகுந்த இக்கோஷ்டியினர் இராணுவம் போல் நடித்து குடும்ப அட்டையைப் பரிசீலிப்பதற்குக் கொண்டு வருமாறு கேட்டுள்ளனர். வீட்டு உரிமையாளர் குடும்ப அட்டையை எடுக்கச் சென்ற போது அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தி சுமார் பத்து லட்சம் ரூபா தங்க நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பித்துக் கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக துன்னாலையைச் சேர்ந்த தங்கவேல் பிரதாப், புலேந்திரன் சாந்தன், தம்பிராசா தயாபரன் ஆகிய மூவரும் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மற்றும் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்ட போது பெண் ஒருவர் இடையில் புகுந்து குழப்பம் விளைவிக்கவே சந்தேக நபர் தப்பி ஓடிவிட்டார். இதனால் சம்பந்தப்பட்ட பெண்ணும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தப்பியோடிய சந்தேக நபரையும் பொலிசார் தேடிவருவதோடு இக்கொள்ளை தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-218)

# குடாநாட்டிற்குக் கப்பல் மூலம் வர்த்தகர்களால் எடுத்துவரப்பட்ட பொருள்களுக்கு விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.மாவட்டத்திற்கு 'டப்லின் வோய் - 7' கப்பலில் தனியார் வர்த்தகர்களால் கொண்டுவரப்பட்ட பொருள்களுக்கான விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட விலை விவரங்களையே யாழ்.அரசாங்க அதிபர் கே. கணேஸ் அறிவித்துள்ளார்.

விலை விவரம் வருமாறு:-

அரிசி(கி.கி)-65 ரூபா, கருவாடு (நெத்தலி-கி.கி)-190 ரூபா, ரின மீன் (ஒரு ரின்)-105 ரூபா, உருளைக்கிழங்கு (கி.கி)-68 ரூபா,தேங்காய் எண்ணெய் (லீற்றர்) -165 ரூபா, உள்ளி (கி.கி)-85 ரூபா, செத்தல் மிளகாய்(கி.கி)-180 ரூபா, மல்லி (கி.கி)-185 ரூபா,பயறு(கி.கி)-120 ரூபா, மஞ்சல்(கி.கி) -135 ரூபா,

புளி(கி.கி)- 65ரூபா,கஜு (கி.கி) - 600ரூபா (கி.கி)-, பிஸ்கட் (கி.கி) -190 (கி.கி)- ரூபா, பால்மா(கி.கி)-475ரூபா, முந்திரியவத்தல்(கி.கி)-230ரூபா, நிலக்கடலை(கி.கி) - 200ரூபா, நூடில்ஸ் (கி.கி) - 95ரூபா, சோயா(கி.கி) - 100ரூபா, மரக்கறிஎண்ணெய்(லீற்றா)- 178ரூபா, அவல-90ரூபா, சவ்வரிசி (கி.கி)-115 ,தேயிலை (கி.கி)- 175 ,பேரீச்சம்பழம்(கி.கி)- 125 ரூபா,பருப்பு(கி.கி) - 95ரூபா, உப்பு (கி.கி) - 25ரூபா, எள் (கி.கி) - 210 ரூபா. (202)

## பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்க கட்டடம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு,ஜன.4

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக கட்டடத்தின் புனரமைப்பு பணிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. தேச புனர் நிர்மாண உட்கட்டமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட மூன்று மில்லியன் ரூபா நிதியைக் கொண்டு இப்புனரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கத்தின் பொது முகாமையாளர் ஏ.நாகராசா தெரிவித்தார். (202-135)






பிரான்பற்று உப தபாலகத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வீ.குமரகுரு சம்பிரதாயப்படி நாடாவெட்டி அஞ்சலகத்தைத் திறந்துவைப்பதையும் யாழ். பிரதேச தபால அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம், யாழ்.தபாலக நுண்ணாய்வுப் பரிசோதகர் சா.புஸ்பநாதன், பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவர் சி.மகேந்திரன், உப தபால் அதிபர் கிருஷ்ணலிங்கம் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலி. தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தபாலகப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு !

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் இறுதிவருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் அனைத்தும் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. (202-226)

* * *

யாழ்ப்பாணம்,ஜன,4

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 2006-2007 கல்வியாண்டுக்கு அனுமதி பெற்ற நூண்கலைப் பீட கலைமாணி, நுண்கலை மாணி கற்கை நெறிக்கான புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது

எனவே அனுமதி பெற்ற சகல மாணவர்களையும் அன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஒன்று கூடுமாறு யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை-

கலைப்பீட நுண்கலை மாணவர்களுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் 5 ஆம் திகதி தொடங்கவுள்ளதாக பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(202-226)




## சிவன் ஆலயத்திற்கு இராஜகோபுரம்

பருத்தித்துறை,ஜன.4

ஆவரங்கால் சிவன் ஆலயத்திற்கு சுமார் 40லட்சம் ரூபா செலவில் அழகிய இராஜகோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.(202-218)

## பளைப் பிரதேசசபை ஊழியர்களுக்குத் தற்காலிக இணைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.4

ஏ-9 பிரதான வீதி மூடப்பட்டதால் யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள பளைப் பிரதேச சபை ஊழியர்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தங்கியிருந்த பளைப் பிரதேச சபையின் ஒன்பது ஊழியர்களுக்கு சாவகச்சேரி நகரசபை, வலி. தென்மேற்கு, வடமராட்சி தென்.மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தற்காலிக இணைப்பு யாழ் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட் டுள்ளது

இந்த ஊழியர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

()

# வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை நாற்றுக்களின் விலை மேலும் அதிகரிப்பு

கட்டைவேலி,ஜன.4

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை நாற்றின் விலை மேலும் அதிகரித்துள்ளது. குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் புகையிலைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலேயே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் 2 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த புகையிலை நாற்றின் விலை தற்போது 8 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இப்பிரதேசத்திலுள்ளோர் மட்டுமன்றி தீவகம், வலிகாமம், தென்மராட்சிப் பகுதி விவசாயிகள் புகையிலைச் செய்கையை மேற்கொள்வதற்காக புகையிலை நாற்றுக்களை வடமராட்சியிலேயே வாங்க வருகின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பொலிகண்டிப் பகுதியில் மிக அதிகளவு புகையிலை நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியிலேயே தற்போது புகையிலை நாற்றுக்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (202-175)

# பன்னாலை கனகசபை வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.4

பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தின் விஸ்தரிப்புப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. இதற்கான உதவியை தெல்லிப்பழை பிரதேச செயலாளரின் சிபார்சில் உலக உணவு நிறுவனம் வழங்கியுள்ளது எனப் பாடசாலை அதிபர் சி.சிவராஜன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்களின் நலன்கருதி இந்த மைதானத்தின் விஸ்தரிப்புப்பணிகள் நடைபெற்றுவருகின்றன. இத்தற்கான மனித வலுவைப் பெற்றோர்கள் வழங்கி வருகின்றனர். இவர்களுக்கு உலக உணவு நிறுவனம் உணவுப்பொருள்களை வழங்கவுள்ளது.

இவ்வேலைத்திட்டத்திற்கு தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளரும் வலிகாமம் வலயப் பணிப்பாளரும் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கி வருகின்றனர். (202)

## தொலைக்காட்சி திருட்டு; ஒருவர் விளக்கமறியலில்!

பருத்தித்துறை,ஜன.4

பருத்தித்துறை, மாதனையில் இரவு வேளையில் வீட்டிற்குள் புகுந்து தொலைக்காட்சி பெட்டியை திருருடிய சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். திருடப்பட்ட தெலைக் காட்சிப் பெட்டியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரவுவேளை வீட்டிற்குள் புகுந்து தொலைகாட்சிப் பெட்டியைத் திருடிய நபரின் அடையாள அட்டை அங்கு விழுந்துள்ளது. மறுநாள் காலையில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையை வீட்டுரிமையாளர்கள் பொலிஸில் ஒப்படைத்தனர்.

புலோலி வடகிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த தம்பையா சுதமதிராஜன் என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பொலிஸார் அவரிடமிருந்து திருடப்பட்ட தொலைகாட்சிப்பெட்டியையும் மீட்டனர்.

இச்சந்தேக நபர் பருத்தித்துறைப் பொலிஸாரினால் நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி சந்தேக நபரை இருவார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (1-218)

## வெள்ளப் பாதிப்பு விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையின் போது ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்களின் விவரங்கள் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் திரட்டப்படுகின்றன.

மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் தங்கள் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களை சேகரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள்ளார்.(202-207)

## பரு. மக்கள் வங்கிக் கிளையில் தன்னியக்க பணப்பரிமாற்ற சேவை

மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளை தன்னியக்க பணப்பரிமாற்ற சேவையை ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப விழா கிளை முகாமையாளர் எம்.சிவனேசன் தலைமையில் நடைபெற்றது. மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலய சிரேஷ்ட முகாமையாளர் கிரிசாந்த குணரட்ண தன்னியக்க பணப் பரிமாற்ற சேவையைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

இவ்விழாவிலே மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே ஆனந்தராஜா, யாழ். பிராந்திய முகாமையாளர் திருமதி எஸ்.சிவனருள்சுந்தரம் உட்பட கிளை அதிகாரிகள், வாடிக்கையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (202-218)

## அடிக்கடி மின்தடை ஏற்படுவதற்குப் பட்டம் ஏற்றுவதும் காரணம்!

வடமராட்சியில் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. அதற்குப் பட்டம் ஏற்றுவதும் ஒரு காரணம் என வடமராட்சியின் மின்சார சபையினர் தெரிவிக்கின்றனர்.

பட்டங்கள் மின் கம்பத்தில் விழுவதாலும் அவற்றின் கயிற்றினை கம்பியின் மேல் போட்டு இழுப்பதாலும் ''பியூஸ்'' சேதம் ஏற்படுவதால் தம்மால் பொதுமக்களின் தேவைக்கான மின்சாரத்தை உரியவாறு வழங்க முடியவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்போது வடமராட்சி மின்சார சபையினரிடம் போதிய ''பியூஸ்'' இருப்பில் இல்லை எனவும் இவை முன்போல் அதிகளவில் வழங்கப்படாமையால் தாம் சிரமப்படுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர். (202-70)

## இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.3

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் வீ.நடராஜா ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ்.சிவராம் சாவகச்சேரி நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (202-207)

* * *

மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.சிவபாலன், யாழ். கன்னாதிட்டி கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


இவரின் இடத்துக்கு அச்சுவேலிக் கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றிய க.சண்முகலிங்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 29 . 03 . 1956

விண்ணில் 05 . 12 . 2007



## அமரர் காசிநாதர் குலசிங்கம்

### (செந்தா பஸ் உரிமையாளர்)

கடந்த 05.12.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, தொலைபேசி, தபால், தந்தி மூலம் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும், இன்னும் பல வழிகளில் உதவிய அன்புள்ளங்களுக்கும், நண்பர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் நீர்வேலி இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
**குடும்பத்தினர்.**

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
0777-173860.

(69550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஸ்மன் அதிரடியாகச் சதம்

# ஆஸி. 463, இந்தியா 3-216

சிட்னி,ஜன.04

சிட்னியில் நடைபெற்றுவரும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் லக்ஸ்மன் அதிரடியாக ஆடிப் பெற்றுக்கொடுத்த சதத்தின் உதவியுடன் இந்திய அணி, ஆஸி. அணிக்கு நிகராக ஓட்டங்களைக் குவிக்கப் போராடி வருகின்றது.

நேற்றைய 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 216 ஓட்டங்களை எடுத்திருந்தது. முன்னதாக ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 463 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. சைமண்ஸ் 162 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்றுவருகிறது. போட்டியின் முதல் நாளான நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலியா 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 376 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்து ஆடி 463 ஓட்டங்களைக் குவித்தது. சதம் அடித்த சைமண்ஸ் 162 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதுவே அவரது டெஸ்ட் அரங்கில் கூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். முன்னதாக, இங்கிலாந்துக்கு எதிராக 2006ஆம் ஆண்டு 156 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

சைமண்ஸுக்கு சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய பிரட் லீ 59 ஓட்டங்களையும் ஜோன்ஸன் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். ஆஸி. அணியின் மிகுதி மூன்று விக்கெட்டுகளையும் கும்ளே கைப்பற்றினார். இறுதியில் ஆஸ்திரேலிய அணி 112.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 463 ஓட்டங்களைக் குவித்தது.

இந்திய அணியின் பந்துவீச்சில் ஆர்.பி.சிங், கும்ளே ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும் ஹர்பஜன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இந்தியா தனது முதல் இன்னிங்ஸை ஆடத் தொடங்கியது. 7ஆவது ஓவரில் மணிக்கு 90 மீற்றர் வேகத்தில் வந்த பந்து வசீம் ஜாபரின் விக்கெட்டைப் பிடுங்கியெறிந்தது. இதனையடுத்து, லக்ஸ்மன் ஆட வந்தார். ஆஸ்திரேலிய பந்துவீச்சைக் கண்டு அஞ்சாமல் அதிரடியாக ஆடிய லக்ஸ்மனின் துடுப்பிலிருந்து பவுண்டரிகள் பறந்தன.

லக்ஸ்மன் ஒரு புறத்தில் அதிரடியாக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டிருந்த நிலையில், ராகுல் டிராவிட் நிதானமாக ஆடினார். பின்னர், அவரும் ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். அரைச் சதத்தைக் கடந்தும் லக்ஸ்மனின் அதிரடி ஓயவில்லை. இதன் பயனாக அவர் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார். டெஸ்ட் அரங்கில் அவரது 12ஆவது சதமாக இது விளங்கியது. 127 பந்துகளை எதிர்கொண்டு லக்ஸ்மன் இந்தச் சதத்தைப் பூர்த்திசெய்தார்.

சிட்னி மைதானத்தில் லக்ஸ்மன் அடிக்கும் 3ஆவது சதமாகவும் அது விளங்கியது. அத்துடன் ஆஸி. அணிக்கெதிரான 5ஆவது சதமாகவும் பதிவானது.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய டிராவிட் டெஸ்ட் அரங்கில் 50ஆவது அரைச்சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார். 2ஆவது விக்கெட்டில் 175 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில் ஜோன்ஸனின் வேகத்தில் டிராவிட் (53) ஆட்டமிழந்தார். இந்தியா 183 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது டிராவிட்டை இழந்தது.

அடுத்த ஓவரிலேயே ஹொக்கின் சுழலில் ஹைடனிடம் பிடி கொடுத்து லக்ஸ்மன் ஆட்டமிழந்தார். 142 பந்துகளை எதிர்கொண்ட லக்ஸ்மன் 18 பவுண்டரிகளுடன் 109 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். சிறப்பாக ஆடிய இந்த இரு வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தது இந்திய அணிக்கு பின்னடைவாக அமைந்தது.

எனினும், பின்னர் சச்சின் டெண்டுல்கர் மற்றும் சௌரவ் கங்குலி ஜோடி சேர்ந்து நேற்றுமேலதிக விக்கெட் இழப்புக்களைத் தவிர்த்தனர். ஆட்ட நேர இறுதியில் இந்தியா 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 216 ஓட்டங்களை எடுத்திருந்தது. கங்குலி 21 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருக்கின்றனர். இன்று போட்டியின் 3ஆம் நாள் ஆட்டம் தொடரும்.

## தடகள வீரருக்கு தடை

ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் கடந்த முறை சம்பியன் பட்டம் வென்ற அமெரிக்கத் தடகள வீரர் ஜஸ்டின் காட்லின் (25), ஊக்கமருந்து உட்கொண்டது கண்டுபிடிக்கப் பட்டது. இது குறித்து விசாரணை நடத்திய குழு நேற்றுமுன்தினம் அவருக்கு 4 ஆண்டுகள் தடை விதித்தது.

இதையடுத்து பீஜிங்கில் ஓகஸ்ட் மாதம் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில் அவர் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தடையை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்ய 6 மாதம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. முன்னணி அமெரிக்கத் தடகள வீராங்கனை மரியன் ஜோன்ஸ் உக்கமருந்துச் சர்ச்சையில் சிக்கி ஒலிம்பிக் பதக்கங்களை இழந்த நிலையில் காட்லினுக்கு 4 ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது இது தடகள அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




## தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட்

# மேற்கிந்தியத் தீவுகள் திண்டாட்டம்

கேப்டவுன், ஜன .04

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் சந்தர்போல் நிதானமாக ஆடி அரைச்சதம் கடக்க நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல் நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 240 ஓட்டங்களை எடுத்திருந்தது. 214 பந்துகளை எதிர்கொண்ட சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களைப் பெற்றுப் போராடிவருகின்றார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் நேற்றுமுன்தினம் கேப்டவுனில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. ஆரம்ப வீரராகக் களமிறங்கிய அணித்தலைவர் கிறிஸ் கைல் அதிரடியாக விளையாடினார். மற்றைய ஆரம்ப வீரரான டரன்கங்கா (3), டேல் ஸ்ரைனின் வேகத்தில் விரைவாக ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த மோட்ரன் 23 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கலிஸ் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 2 சிக்ஸர்கள் மற்றும் 2 பவுண்டரிகள் விளாசிய கைல் 46 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து, அரைச்சதம் கடக்கும் வாய்ப்பை 4 ஓட்டங்களால் நழுவவிட்டார். அடுத்து வந்த சந்தர்போல், சாமுவேல்ஸுடன் ஜோடி சேர்ந்து அணியைத் தூக்கி நிறுத்தினார். சிறப்பாக விளையாடிய சாமுவேல்ஸ் டெஸ்ட் அரங்கில் 9ஆவது அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக் காக 106 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சாமுவேல்ஸ் (51), நிற்னியின் துல்லியத்தில் பெவிலியன் திரும்பினார்.

எனினும், மறுமுனையில் நிதானமாக விளையாடிய சந்தர்போல் அரைச்சதம் கடந்து அசத்தினார். நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல்நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட் இழப்புக்கு 240 ஓட்டங்களை எடுத்திருந்தது


## சித்த மருத்துவத்துறை
## யாழ்.பல்கலைக்கழகம்
### 2006/2007இற்கான கற்றல் செயற்பாடு ஆரம்பம்

சித்த மருத்துவத்துறை 2006/2007 கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் 21.01.2008ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். அன்று காலை 9 மணிக்கு சகல மாணவர்களும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

2ஆம், 3ஆம், 4ஆம் இறுதியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளும் அன்றைய தினம் (21.01.2008) ஆரம்பமாகும். சகல மாணவர்களும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2008.01.02 (சி/55029) பதிவாளர்.

## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில் நாவலர் றோட், யாழ்ப்பாணம். ⟵ இரு இடத்திலும் ⟶ இணுவில் மத்தி அருகில் கே.கே.எஸ்.வீதி, இணுவில்

A/L 2010

கலை, வர்த்தகப் பிரிவுகள் (சனி - ஞாயிறு)

நீங்கள் நன்கு அறிந்த யாழ்.நகரின் பிரபல்யம் ஆசிரியர் குழுவினால்

| A/L 2010 | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | சுதாகரன் | சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயசு |
| அரசியல் | றஜீவன் | சுகோஷ் |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | ஜெயமோகன் | ஜெயமோகன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| நாட.அரங்கியல் | கணேஷ் | கணேஷ் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

யாழ்.நகரில் ஆரம்பம் ⟶ 05.01.2008 சனி 9.30 a.m

இணுவிலில் ஆரம்பம் ⟶ 06.01.2008 ஞாயிறு கலைப் பிரிவு 9 a.m வர்த்தகப் பிரிவு 2 p.m

நீங்கள் விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். (ச/54881)

A/L Day Class

கலை /வர்த்தகம் - ஆரம்பம் 07.01.2008


## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### தியாகராசா மகேஸ்வரன்

(இந்துசமய கலாசார அலுவல்கள் முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது பிரிவால் பிரான்பற்று கிராம மக்களும் ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரான்பற்று பெரியவளவு முருகனை வேண்டுகின்றோம்.

- பிரான்பற்று மக்கள்.

## மூன்றாமாண்டு நினைவஞ்சலி

உருவாய் 04 11 1922



அருவாய் 06 01 2005

அமரர்

### வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை

அன்பும் ஆதரவும் இன்சொல்லும் ஈகையும் உழைப்பும் ஊக்கமும் மிக்க ஐயா! உம் நினைவில் நனைகின்றோம்! இறையடியில் சாந்தி பெறுக.

மனைவி பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

கன்னாகம் தெற்கு. (69709)


## வடமராட்சி லயன்ஸ் கழகம்

அதிர்ஷ்டலாப சீட்டிழுப்புப் பரிசு வழங்கலும், கண்ணாடி வழங்குதலும்

| அதிர்ஷ்ட சீட்டிலக்கங்கள் | | ஆறுதல் பரிசுகள் | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 1347 | 3429 | 1125 |
| 2ஆம் பரிசு | 1683 | 4587 | 1151 |
| 3ஆம் பரிசு | 0347 | 2883 | 0199 |
| 4ஆம் பரிசு | 3707 | 3854 | 4193 |
| 5ஆம் பரிசு | 2051 | 1290 | 0876 |

பரிசுகள் வழங்குதல், கண்ணாடி வழங்குதல் (வல்லிபுர ஆழ்வார் ஆலயம், நெல்லியடி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெற்றவர்களுக்கு)

நிகழ்வு இடம்: தேவரையாளி இந்துக்கல்லூரி

காலம்: நாளை (05.01.2008) பி.ப 2.30 - பி.ப 3.30

லயன் க.கமலேஸ்வரன், தலைவர். (69702) லயன் ச.தவச்செல்வன், செயலாளர்.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கஜன் கருணாநிதி

மலர்வு: 27★07★1979

உதிர்வு: 04★01★2005

கதைகள் பல பேசி, கனவுகள் பல கண்டு - வாழ்வை களித்திருக்கப் பிறந்தவனே! கசடறக் கலைகள் கற்று கற்றவழியில் நின்ற உன்னை காலனவன் கவர்ந்து சென்றதேனடா?

ஆண்டுகள் மூன்று சென்றாலென்ன ஆறாது உந்தன் நினைவுகள் என்றும்.

212, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம். (69713) -குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### ஐயம்பிள்ளை சரஸ்வதி

தோற்றம் 16✱03✱1935


மறைவு 05✱12✱2007

மாதம் ஒன்று ஆனபோதும் ஆறாது எம்துயர்-உமது அன்பான நினைவுகளில் அமிழ்கின்றோம் அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தில்லையம்பதி, கோண்டாவில். (67714) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



## உயர்திரு. வே.தி.செல்வரத்தினம்

**B.A, Dip. in Edu., SLEAS - II**

(யாழ்.மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளரும், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளரும்)

எமது கல்லூரித் தாயின் மைந்தனும்
புகழ்பூத்த முன்னாள் அதிபருமான
வே.தி.செல்வரத்தினம் அவர்கள்
05.01.2008 அன்று
அகவை அறுபதைப் பூர்த்தி செய்து
மணிவிழாக் காண்பதையிட்டு
பெருமகிழ்வு அடைந்து
வாழ்த்தி நெஞ்சம் நெகிழ்கின்றோம்
மணிவிழா நாயகன்
நீண்ட ஆயுளுடன்
வரையற்ற வளம் பெற்று
வையகம் புகழ வாழுமாறு
வாழ்த்துகின்றோம்.

தென்பொதிகைக் குன்றாய் தெவிட்டாத பூந்தமிழை
அன்பொழுக ஈன்றெடுக்கும் அற்புதமே- விண்நிலவாய்
புன்னகைக்கும் மன்னரே! உங்கள் மணிவிழாவில்
பொன்போல் ஒளிரும் புகழ்!

(69687)

**ஆசிரியர் கழகம்,**
**யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, வல்வெட்டித்துறை.**

## மரண அறிவித்தல்கள்

### இராமு நாகரத்தினம் (கந்தசாமி)



நாவலடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வதிவிடமாகவும் கொண்ட இராமு நாகரத்தினம் 28.12.2007 அன்று இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - அன்னம் தம்பதியரின் அன்பு மக னும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் பி.அன்னலட்சுமி, து.செல்வம் ஆகியோரின் சகோதரனும் அனுரா, தனுஷா, கோபிகா, கியாசன் ஆகியோரின் தந்தையும் தெ.விஷ்ணுரஞ்சனின் (சின்னப்பன்) மாமனும் காலஞ்சென்ற வா.பிள்ளையான் மற்றும் கொ.துரைசிங்கம், பூமலர், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2008) சனிக்கிழமை இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
உடுப்பிட்டி.

தகவல்:
கொ.துரைசிங்கம்,
கொ.குணசிங்கம் (ஆசிரிய ஆலோசகர், ஜே.பி.).

(69686)

### ஜோர்ஜ் யூலியஸ்



குருநகரைச் சேர்ந்த ஜோர்ஜ் யூலியஸ் (திருக்குமார்) 01.01.2008 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் - ஆனாயிமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சவுந்தரம் - பிலோமினா தம்பதியரின் மருமகனும் மேரி இமல்டாவின் அன்புக் கணவரும் யூலியற், யூட்ராஜ் (DOHA), யூலன்றாஜ் (DOHA), அருட்சகோதரி மேரி யூடிற்றா (Holy Cross) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பங்கிராஸ் (அதிபர், யாழ். சென்.பீற்றஸ் றோ.க.பாடசாலை), ஜென்சில்டா (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), நிமலதர்சினி (யாழ்.பல்கலைக்கழகம் -கலைப் பிரிவு) ஆகியோரின் மாமனாரும் பலோமியற், சாளினி, சிந்துஜா, றொசான், மில்ரன், சரோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான யேசுரெத்தினம், செல்வகுமார், ராசகுமார், மேரிறோஸ் மற்றும் மலர், சின்னக்கிளி, சேர்மனம்மா, வவா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேஷ், பெரியபிள்ளை, அன்ரனி, ராசகுமாரி காலஞ்சென்ற செல்வக்குமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (05.01.2008) சனிக்கிழமை காலை 9மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலியின் பின் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22, சென்.ஜேம்ஸ் ம.வித்தியாலய வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்தந்தை கை.பி.கனீசியஸ்
(உதவிப் பங்குத்தந்தை மரியன்னை பேராலயம்)

(69658)

## நத்தார் விழா

பருத்தித்துறை,ஜன.4

பருத்தித்துறை பங்கின் நத்தார் விழாவும் பரிசளிப்பு வைபவமும் பருத்தித்துறை அந்தோனியார் தேவாலயத்தில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட் திரு.ஜே.எக்ஸ்.பேனாட் றெக்னோ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை சக்கோட்டை பங்குத்தந்தை அருட் திரு.எஸ்.பத்தி நாதன் அடிகளார் விருந்தினராகக் கலந்து கொண்டார். (202-218)

## கண்ணீர் அஞ்சலி

எமது [illegible]சாலை ஆசிரியர்
திருமதி [illegible]ஸ்வரி கிருஷ்ணராஜா
அவர்களின் அன்பு மாமன்
**பொன்னம்பலம்**
**துரைரட்ணம்**
அவர்கள் 29.12.2007 சனிக்கிழமை
காலமானார். அன்னாரின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தின ன்
துயரில் நாமும் பங்குகொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**[illegible] சாலைச் சமூகம்,**
யா/முத்து[illegible] வித்தியாலயம்.


**இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் படிப்புகள்**

பெங்களூர் பல்கலைக் [illegible] இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர் தரம் அ/க 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

Company Secretarial Services (Pvt) Ltd.
SMS011 - 4520270 Name & Address for details
Tel: 0777 317043 (சி/54884)


## தேவை

* புத்தகக் கடையிலும், ரியூட்டறியிலும் உதவியாளராகப் பணியாற்றக் கூடியவர் (பெண்) தேவை.
* பகுதிநேரமாக வருகைதந்து கணனி வேலைகள் (Typing) செய்யக்கூடிய ஒருவர் (பெண்) தேவை.

[illegible]
[illegible]
166, நாவலர் வீதி, யாழ். (69671)

## 31ஆம் நாள் அந்தியேட்டி

தோற்றம் 01 . 10 . 1902



மறைவு 06 . 12 . 2007

### அமரர் பொன்னுச்சாமி சிவசாமி

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.01.2008) சனிக்கிழமை அவரது தொண்டைமானாறு அரசடி இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்துடன் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி,
தொண்டைமானாறு. (69664)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவயோகம் செல்லையா**
(யோகம்மா)

அன்னை மடியில்
09.02.1926

ஆண்டவன் மடியில்
17.12.2006

திதி: துவாதசி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எளிமையின் சின்னமாய் கடமையில் கண்ணியமாய்
அனுதினம் ஆண்டவன் கழல் பணிந்து
ஆயுள் முடித்திரே ஏங்குகின்றோம் உம் நினைவால்!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.5, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(69505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இனப் பாகுபாட்டுக் கொடூரம் இன்னும் தீவிரமாகும் சூழல்

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 பெப்ரவரி 22 ஆம் திகதி கைச்சாத்தான யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு சட்ட ரீதியான சாவு உறுதியாகிவிட்டது. இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவது பற்றிய இலங்கை அரசின் தீர்மானம் உத்தியோக பூர்வமாக அனுசரணைத் தரப்பான நோர்வேக்கு அறிவிக்கப்பட்டதும், பதினான்கு நாள்களில் நடைமுறைக்கு வரக்கூடியதாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கான மரணச் சான்றிதழ் எழுதப்பட்டுவிடும்.

இலங்கை அரசின் இந்த முடிவின் காரணமாக, இதுவரை செத்துச் செயலிழந்து, சேடம் இழுத்துக்கொண்டிருந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிராணன் நிரந்தரமாக வெளியேறப் போகிறது. அதுமட்டுமல்ல.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தனது ஐந்தரை வருடப் பணியை முடித்துக்கொண்டு மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வெளியேற வேண்டியதுதான்.

இதுவரை அனுசரணைப் பணியாற்றிய நோர்வேக்கும் இனி அந்த வேலை நிலுவையில் நிற்கப் போவதில்லை. அதுவும் முடிந்தமாதிரித்தான்.

இந்த அனுசரணைப்பணிக்கு 2000 ஆம் ஆண்டில் அப்போதைய இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நோர்வே உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டது.

2005 நவம்பரில் அவரின் அதிகார காலம் முடிவுற்றது. நோர்வேயையும் அதன் அனுசரணைப் பணியையும் கடுமையாக விமர்சித்துத் தூற்றிவந்த பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளின் பின்புல ஆதரவோடு மஹிந்த ராஜபக்ஷ அரசுத் தலைவரானார். அவரை ஆட்சிப் பீடத்துக்கு முன்தள்ளிக் கொண்டு வந்த பேரினவாத சக்திகள் நோர்வேயின் பங்களிப்பை கடுமையாக எதிர்த்து வந்ததால் நோர்வேயின் அனுசரணைப்பணி மீண்டும் இடம்பெறுவதற்கு வாய்ப்பேயில்லை என அப்போது கருதப்பட்டது.

ஆனால் புதிய அரசுத் தலைவர் மஹிந்தவும் 2006 ஜனவரியில் நோர்வேயை அனுசரணைப் பணிக்கு மீண்டும் அழைத்ததால் நோர்வே மீண்டும் தனது நகர்வுகளை முன்னெடுத்தது.

எனினும், அது கூட நீண்ட காலம் நீடிக்கவில்லை.

மஹிந்தரின் புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் இடம்பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுகள் 2006 ஒக்ரோபரில் முன்னேற்றமின்றி, முட்டுக்கட்டையில் முடிவடைந்ததை அடுத்து, நோர்வேயும் தன்பாட்டில் தனது அனுசரணைப் பணியை இடைநிறுத்த வேண்டியதாயிற்று.

பிணக்கில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரான இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் மீண்டும் கேட்டாலன்றி புதிய அமைதி எத்தனங்கள் எதிலும் ஈடுபடுவதில்லை என நோர்வே அப்போதே தீர்மானித்து அறிவித்திருந்தது.

மீண்டும் அத்தகைய அழைப்பு ஏதும் வராத நிலையிலேயே, இப்போது யுத்த நிறுத்த ஒப்பந்தமே முடிவுக்குக் கொண்டுவரப்படுவதால், இனி அனுசரணைப் பணிக்கு வாய்ப்போ - தேவையோ - இல்லை என்றாகிவிட்டது.

கடந்த வரவு - செலவுத் திட்ட சமயத்தில் ஆட்சி கவிழும் ஆபத்தை எதிர் நோக்கிய மஹிந்த அரசு, கடைசி நேரத்தில் பௌத்த - சிங்களத் தீவிரப் போக்கும் பேரினவாதத் திமிரும் கொண்ட ஜே.வி.பியின் காலில் விழுந்து, அதைத் தாஜா செய்து, அக்கட்சியின் தயவில் - கடைக்கண் பார்வையில் - தப்பிப்பிழைக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானது. ஜே.வி.பியிடம் அந்த உதவியைப் பெறுவதற்காக அரசுத் தலைமை சில வாக்குறுதிகளை அதற்கு வழங்கியது என்றும், அவற்றைப் புத்தாண்டில் நடைமுறைப்படுத்த அரசு ஜே.வி.பிக்கு உறுதி தந்தது என்றும் இப்பத்தியில் ஏற்கனவே விளக்கமாக - விவரமாக - குறிப்பிட்டிருந்தோம்.

அத்திட்டப்படியே எல்லாம் நடக்கின்றன; விடயங்கள் கட்டவிழ்கின்றன.

அந்த வாக்குறுதிப்படி புத்தாண்டு பிறந்ததும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவது பற்றிய அறிவிப்பை இலங்கை அரசு விடுத்திருக்கின்றது.

இரண்டு வார முன்னறிவித்தல் காலம் கடந்ததும் - யுத்த நிறுத்த ஒப்பந்தம் உத்தியோகபூர்வமாக செத்ததும் - ஏற்கனவே ஜே.வி.பிக்குத்தான் கொடுத்த மற்றொரு வாக்குறுதிப்படி, புலிகள் இயக்கம் மீது இலங்கையிலும் தடை விதிக்கும் அறிவிப்பை அரசு விடுக்கும்.

அதன் பின்னர் அடுத்த வாக்குறுதிப்படி - இலங்கை நாட்டின் இறைமையைப் பேணும் விதத்தில் காத்திரமான நடவடிக்கை எடுத்தல் என்ற பெயரில் - தமிழர் தேசம் மீது முழு அளவில் ஒரு கோர யுத்தத்தை அது கட்டவிழ்த்து விடும்.

- இவை எதிர்பார்க்கப்பட்ட விடயங்களே.

ஆனாலும் மஹிந்த அரசின் இந்த உத்தேச நிகழ்ச்சி நிரல் - யுத்தத் தீவிரப் போக்குச் செயற்பாடு - இதுவரை அரசுக்கு வெளியே நின்று அரசுத் தலைமைக்கு அவ்வப்போது தொல்லை மற்றும் தொந்தரவு கொடுத்து வந்த ஜே.வி.பியை மீண்டும் அரசுத் தரப்புக் கூட்டணிக்குள் கூட்டி வந்து சேர்ப்பதற்கு வழி செய்தாலும் செய்யலாம் என்பதே நிலை.

ஆகவே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் இந்தத் தீர்மானம், பௌத்த - சிங்களப் பேரினவாதச் சிந்தனையில் மூழ்கிக் கிடக்கும் தீவிரவாதிகளை அவரின் பின்னால் மீண்டும் ஐக்கியப்பட்டு அணி திரளச் செய்யப் போகின்றது.

இதன் விளைவு, சிறுபான்மை இனத்தவருக்கு எதிரான இனப்பாகுபாட்டுக் கொடூரம் இலங்கைத் தீவில் இன்னும் தீவிரம் பெறவே வழிசெய்யும் என்பது நிச்சயம்.

# கொலைச் சந்தேக நபர் விடயத்தில் நீதித்துறைக்கு அரசு சவால் விடுகிறது

## உயர்நீதிமன்றைத் தலையிடக் கோருகிறார் கிரியெல்ல

கொழும்பு,ஜன.4

நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் படுகொலை தொடர்பான விடயத்தில் நீதித்துறைக்கு சவால் விடும் வகையில் அரசு காய்நகர்த்துகின்றது.

அடையாளம் காணப்பட்டுள்ள கொலைச் சந்தேகநபரை நீதிமன்ற அனுமதியின்றி நான்காம் மாடிக்குக் கொண்டுசெல்லத் திட்டமிட்டுள்ளனர். எனவே, உயர்நீதிமன்றம் இவ்விடயத்தில் சுயமாகத் தலையிட்டு நீதியைக் காப்பாற்றவேண்டும் - என ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்கக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் ஜோன்ஸன் கொலின் வஸந்தன் வலன்டைன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இவர் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். இச்சம்பவம் தொடர்பாக எவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்படவில்லை. இரசாயனப் பகுப்பாய்வுகளும் முற்றுப்பெறவில்லை. சந்தேக நபரை நீதிமன்றத்தின் அனுமதியின்றி எங்கும் கொண்டு செல்லமுடியாது. முறைப்படி சந்தேக நபர் நீதிமன்றத்தின் முன் ஆஜர்ப்படுத்தப்படவேண்டும்.

ஆனால், சந்தேகநபரை இரகசியமான முறையில் பொலிஸ் தலைமையகத்தின் புலனாய்வுப் பிரிவான நான்காம் மாடிக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தச் செயல் நீதித்துறைக்கு சவால் விடும் ஒரு நடவடிக்கை மட்டுமல்ல, முழு நீதித்துறையையுமே அவமானப்படுத்தும் ஒரு செயலுமாகும். - எனவும் சட்டத்தரணியான லக்ஷ்மன் கிரியெல்ல குற்றஞ்சுமத்துகின்றார். (சி)

# மகேஸ்வரன் கொலைக்கு திருமாவளவன் கண்டனம்

சென்னை, ஜன.4

"தியாகராஜா மகேஸ்வரன் எம்.பி. கொல்லப்பட்டதற்கு இந்திய அரசு இலங்கை அரசைக் கண்டிக்க வேண்டும்."

- இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

புத்தாண்டு தினத்தில் கோயிலுக்குச் சென்றபோது மகேஸ்வரன் எம்.பி. கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் இவரைப் புலிகள் கொன்றுள்ளனர் எனக் கட்டுக்கதை புனைந்திருப்பது வேடிக்கையான ஒன்று.

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை என்றால், சாதாரண தமிழ் மக்களின் நிலைமையை இந்திய அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசைக் கண்டித்து இத்தகைய போக்குத் தொடர்வதைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.4

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும் யாழ்.அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமும் இணைந்து அவசரகால முதலுதவி என்னும் நூலை வெளி யிட்டு வைக்கவுள்ளன.

இந்நூலின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இணைய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

யாழ் .சர்வோதயத் தலைவர் ஏ.கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக உலக உணவு நிறுவனத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி எம்.சிவராஜா கலந்து கொள்வார்.

இந்நூலை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் எழுதியுள்ளார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு ,ஜன.4

வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் - 5 பேர் பங்கு பற்றும் - உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* அராலி பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம்
* மற்றுமொரு போட்டியும் இடம் பெறவுள்ளது (202-86)

* * *

வலி. வடக்கு ,ஜன.4

மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் வலிகாமம், யாழ்பாணம் உதைப்பந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்தி வரும் - 7 பேர் பங்கு பற்றும் - உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன. (202-86)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 20 | சனிக்கிழமை 05.01.2008 |
| நட்சத்திரம் : | அனுஷம் மாலை : 06.19 |
| திதி : துவாதசி | பி.ப : 1.34 |
| | சனிப்பிரதோஷ விரதம் |
| சுபநேரம் | : 03.31-05.01 |
| ராகுகாலம் | : 09.31-11.01 |

# யாழ். செயலகப் பணியாளர்கள் மக்கள் சேவைக்கான உறுதி மொழி

## அரச அதிபர் ஏற்பாட்டில் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.4

அரச சேவையை நட்புடன் மக்களுக்கு வழங்குவதற்கும் அரச பணியாளர்களின் வினைத்திறனான மாற்றத்தைக்கொண்ட மனப்பாங்கின் தேவையை வற்புறுத்துவதற்குமான பணியாண்டாக இவ்வாண்டை, யாழ். செயலகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 29/2007 இற்கு அமைவாக இந்தப் பணியாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் முதலாவது வேலை நாளான கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகத்தில் நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

யாழ். அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செயலகத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் அரச சேவை உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர். (202)



கலந்துகொண்ட ஊழியர்களையும் அரச அதிபர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## அமைச்சர் டக்ளஸை இலக்கு வைத்த

# தற்கொலைக் குண்டுதாரியின் இரத்தமாதிரி நிபுணர்களிடம்!

கொழும்பு,ஜன.4

கடந்த மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து அவரது அமைச்சு அலுவலகத்துக்கு வந்தவர் எனக் கூறப்படும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய பெண்ணின் இரத்த மற்றும் உடல் அவயவ மாதிரிகள் மரபணுப் பரிசோதனைக்காக நிபுணர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்குள் குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்த அந்தப் பெண்ணைச் சரியாக அடையாளம் காண்பதற்காகவே இந்த நடவடிக்கை என்று பொலிஸார் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரத்னவிடம் தெரிவித்தனர்.

மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் ஸ்ரீபன் பீரிஸ் உயிரிழந்திருந்தார். இவ்விவகாரம் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பொலிஸார் மேற்படி விடயங்களைத் தெரிவித்தனர்.

மேற்படி தற்கொலைக் குண்டுதாரி வைத்திருந்த அடையாள அட்டையில் அவரது பெயர் தேகவனம் சுஜாத்தா என்று குறிப்பிட்டிருப்பதாகக் கூறிய பொலிஸார், இந்த அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஆவணங்களைத் தாங்கள் பரிசீலிப்பதற்கு உரிய உத்தரவிடுமாறு நீதிமன்றை வேண்டினர்.

மேற்படி அடையாள அட்டைக்கான விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட சகல ஆவணங்களினதும் பிரதிகளை குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கும், நீதிமன்றுக்கும் ஒப்படைக்குமாறு ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி தற்கொலைக் குண்டுதாரி ஒட்டோ ஒன்றில் அன்றைய தினம் அமைச்சு அலுவலகத்துக்கு வந்திறங்கியமை வீடியோவில் பதிவாகியிருக்கின்றது என்றும் -

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்றும் -

குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ
## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்
### அமரர் அப்பையா கந்தையா (அப்பா)



அன்னை மடியில் 01.07.1937
ஆண்டவன் அடியில் 05.12.2007

கடந்த 05.12.2007 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு உடன்வந்துதவிய அன்புள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாகியப்பிட்டிச் சந்தி, சண்டிலிப்பாய். (69696) சகோதரிகள், மைத்துனர்.

## தையற்பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.4

தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்படவுள்ள இலவச தையல் பயிற்சி வகுப்புகளின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பயிற்சி நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட பெண்களை நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த 175 பேரில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும், இளம் விதவைகளுக்குமான 25 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
### திருமதி சண்முகதாசன் இராசலட்சுமி



மண்ணில் 07.10.1931
விண்ணில் 16.12.2006

திதி: 04.01.2008

ஆண்டு ஒன்றாகியும் நீங்காத
நினைவில் இருக்கும் அன்னையே!
அகிலத்தில் நாம் வாழ
வழி செய்தீர்!
அமரராகி எம் இதய
தெய்வமானீர்!
முருகனருளால் தங்கள் ஆத்மா
என்றும் சாந்தியடையட்டும்.

கொட்டுடை, வட்டுக்கோட்டை. (69564) தகவல்: குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி
### அமரர் கணபதிப்பிள்ளை சகாதேவன்
(பிள்ளையார் கூல்ஸ்பொட் உரிமையாளர்)



தோற்றம் 07.10.1944
மறைவு 05.12.2007

மாதம் ஒன்று சென்றாலும் மாறாது
உங்கள் நினைவு மீளாத் துயரில்
எம்மை ஆழ்த்தி விட்டு
மறைந்தீரே அப்பா!
உங்கள் அன்பு முகத்தை மறப்போமோ!
மீண்டும் வந்து எமக்குள் பிறந்திடமாட்டாயோ!

அன்னாரின் இல்லத்தில் இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (69673) குடும்பத்தினர்.

## கோழி வளர்ப்பு பயிற்சி வகுப்பு

வடமராட்சிப் பிரதேசத்தில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கான பயிற்சிவகுப்பு எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிவகுப்பில் கோழிவளர்ப்பாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன் தெரிவித்துள்ளார்.

(202-160)

## மரண அறிவித்தல்
### திருமதி அருள்மலர்தேவி சத்தியபாஸ்கரநாதன்



துன்னாலை, தாமரைக் குளத்தடியைப் பிறப்பிடமாகவும் ரொரன்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள்மலர்தேவி சத்தியபாஸ்கரநாதன் 29.12.2007 அன்று காலமானார்.

அன்னார் உடுப்பிட்டியைச் சேர்ந்த சத்திய பாஸ்கரநாதனின் அன்பு மனைவியும் போல் சுரேந்திரநாதனின் அன்புத் தாயும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் (ஓய்வுபெற்ற ஊழியர், நீர்ப்பாசனத்திணைக்களம்)- தவபாக்கியம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லமுத்து (ஆசிரியர்)- சொர்ணபூமலர் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சட்டத்தரணி அருள்நாயகம் மற்றும் மரியதாஸ் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) , புஸ் பராசா (நீர்ப்பாசனத் திணைக்களம்), அருளயோசப் (பொருளாளர், JDCSI), அருள்தேவரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காந்திமதிநாதன் (லண்டன்), கோபாலசுந்தரநாதன் (கனடா), குலசிங்கநாதன் (கொழும்பு), சித்திரலேகா பாக்கியநாயகம், குலேந்திரநாதன் (கனடா),போசபுணநாதன் ஆகியோரின் மைத்துனியும் குணமணி, விஜயகுமாரி, நேசமணி (லண்டன்), கிருபாநிதி (பிரான்ஸ்), விஜயலக்சுமி (லண்டன்), சற்குணதேவி (கனடா), மௌலீஸ்வரி (கொழும்பு), கிருபாநிதி (கனடா), கிறிஸ்சாந்தி (கனடா), ஆகியோரின் மைத்துனியும் அருள்மணி (லண்டன்), விஜயதாஸ் (Ceylinco Grameen Credit), விஜயதர்சினி, அருள்குமரன், காலஞ்சென்ற அருள் றூபன் மற்றும் வசீகரன், சசிகரன், யுகநிதி, அரவிந், சாரங்கா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை ரொரன்ரோ, கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

165/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (69688) தகவல்: சகோதரர், மைத்துனி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 04 . 1951
மறைவு 15 . 01 . 2007

### அமரர் சீனியர் தனபாலசிங்கம்
[ஒலிபெருக்கி உரிமையாளர்]

இல்லத்தில் இனிது வாழ்ந்து
இன்பச் செல்வங்களாய் பிள்ளைகளை வளர்த்து
இனிதே யவர்கள் வாழ வழிகாட்டி
இன்முகத்தோடு சீராட்டிப் பாராட்டி
ஈற்றில் நோயில் வீழ்ந்த- அப்பா
நீர் மறைந்து ஆண்டு ஒன்றுதான் ஆனதுவோ?
எங்கள் ஈரவிழிகள் காய்ந்திடமுன்- மறுபடியும்
இங்கு வந்து பிறந்திடுங்கள் எங்களப்பா!

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். குடும்பத்தினர். (69694)

## அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை
### 2007 ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப்பத்திரம் வாகன, மிருகவரி உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், வங்கிகள் போன்ற உயர் தொழில் நிறுவனங்கள் வியாபார வரிகளையும் வியாபார உரிமக்கட்டணங்களையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமங்களையும், தொழில்கள் மீதான வரிகளையும் எதிர்வரும் 31.03.2008 ஆம் திகதிக்கு முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறித்த திகதியின் பின்னர் மேற்குறிப்பிட்ட உத்தரவுப் பத்திரங்களைப் பெறத்தவறியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

அத்துடன் தொழில் மாற்றம் செய்பவர்களும் புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும் தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் சபைக்கு அறியத்தந்து ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
27.12.2007 (சி/54898)

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம்.

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை
### சுன்னாகம்/ உடுவில்/ ஏழாலை உப அலுவலகங்கள்
## ஆதனவரி அறிவித்தல்கள்- 2008

1987 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் சட்டத்தைச்சட்டம் இல.15 இன் பிரகாரம் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பாக, ஆதனவரி அறவிடு சென்ற வருடம் அறவிட்ட விகிதத்தின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டும் அறவிடு செய்யப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 2008.01.31 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாக செலுத்துபவர்களுக்கு இவ்வருடத்திற்கான மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய வரியை அந்த காலாண்டிற்கு முதல் மாத இறுதிக்குள் செலுத்துபவர்களுக்கு அக்காலாண்டிற்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்தத்தவறின், வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20%மும் விறந்து கட்டணமாக ஆதனவரியுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

ஆகையினால் வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரியை 2008.01.31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக அந்தந்த அலுவலகங்களில் முழுவதுமாகச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
27.12.2007 (சி/54899)

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு பாடசாலைகள் சிலவற்றின் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.4

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின.

குடாநாட்டுப் பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகளை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள் வருமாறு:-

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

*உயிரியல்:* ப.பாமினி - 2ஏபி, தே.கௌசிகா - ஏபிசி, த.விஜிதா - 2பிசி, த.கீர்த்திகா - 2பிசி,

*கணிதம்:* சு.அருட்சுதா - 2பிசி, க.டிலானி - ஏபிசி, லோ.ஜோதிகா - பி2சி,

*வர்த்தகம்:* மு.சிந்துஜா - 3ஏ, சி.சிவரூபினி - 3ஏ, கு.சிந்துஜா - 2ஏபி, பே.கார்த்திகா - 2ஏபி, சி.வஜிதா - 2ஏசி, ஜெ.துஷா - ஏ2பி, ஜெ.நீரஜா - ஏ2பி, சி.துஷாந்தி - ஏ2பி,

பு.பரிமளா - ஏ2பி, கு.மிதிலா - ஏபிசி, ஜெ.சைந்தவி - ஏபிசி, சு.சுஜாமதி - ஏபிசி, ரி.ஜெராலினி - 3பி, த.தாரணி - 3பி, கு.நிஷ்மதா - 3பி.

*கலை:* ஜோ.சரண்யா - 3ஏ, ம.வினோ - 3ஏ, கு.நிரஞ்சலா - 2ஏபி, கு.பிரதீபா - 2ஏபி, இ.கிஷாந்தி - 2ஏபி, ஈ.பிருந்தா - 2ஏபி, வ.ரூபினி - 2ஏபி, பு.சிற்றிகா - 2ஏபி, க.அனித்தா - 2ஏபி, ப.சுரேகலா - 2ஏசி,

ச.ஜனுசியா - ஏ2பி, கு.குவேனி - ஏ2பி, ச.சசிரேகா - ஏ2பி, த.துஷதா - ஏ2பி, அ.அனுதர்சினி - ஏ2பி, கு.சுகிதா - ஏ2சி, து.அனுரேகா - ஏ2சி, ம.மனஸ்வினி - ஏ2சி, ப.நர்மதா - ஏ2சி, ம.ஜனனி - ஏ2சி, லி.சிந்துஜா - ஏ2சி, க.யதுப்பிரியா - ஏ2சி, அ.கலைச்செல்வி - ஏ2சி.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

*கணிதம்:* கு.தனஞ்சன் - 3ஏ, அ.கோகுலறமணன் - 2ஏசி,

*வணிகம்:* ச.அமிராஜ் - ஏ2பி, க.சயந்தன் - ஏ2பி,

*கலை:* நா.சதீஸ்வரன் - 2ஏபி, அ.ஜெபநேசன் - 2ஏபி, சீ.பாலறமணன் - 2ஏசி,

*உயிரியல் :* பா.விஜிதரன் - பி2சி, க.கோகிலன் - பிசிஎஸ்.

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

*கலை:* சு.பாஸ்கரன் - 3ஏ, செ.பிரதாப் - 2ஏபி, கு.மசிதலா - 2ஏபி, வி.ஜனகன் - 2ஏபி, சி.ஜனந்தன் - ஏ2பி, த.நிதர்சன் - ஏ2பி, ச.பிறேம்நிசாந்தன் - 3பி, த.திலீபன் - 3பி, சி.சிவசுதன் - 3பி,

*கணித - விஞ்ஞானம்:* பா.கோபி - ஏ2பி.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

இ.மீரா - 2ஏபி, சோ.கௌசிகா - 2ஏசி, ந.சத்தியசீலா - 2ஏசி, ந.கார்த்திகா - 2ஏசி, சி.ஜெயதீபன் - ஏபிசி, நி.நிசாந்தினி - ஏபிசி, சி.சாதனா - ஏபிசி, ம.மேகலா - ஏ2சி,

து.சுகிதரன் - ஏ2சி, யோ.சுதர்சன் - ஏ2சி, க.தமிழினி - ஏசிஎஸ், கு.றயீத் - 3பி, கி.கருணாகரன் - 2பிசி, இ.கேதீசன் - 2பிசி, க.அருள்மதி - 2பிஎஸ், க.விஜிதரன் - 2பிஎஸ்.

# முல்லைத்தீவில் வான் தாக்குதல் இரண்டு பொதுமக்கள் காயம்

முல்லைத்தீவு, ஜன.4

முல்லைத்தீவு, அளம்பில் பகுதியில் நேற்றுமுன்தினம் அரச விமானப்படை மிக் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் சுமார் 12.30 மணியளவில் மிக் விமானங்களால் அளம்பில் பகுதிமீது வீசப்பட்ட குண்டுகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, விஜயகுமார் (வயது - 30), இராசநாதன் (வயது - 40) ஆகிய இருவரும் படு காயமடைந்தனர்.

இத் தாக்குதலில் ஆறு வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பல பயன்தரு மரங்களும் அழிந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# மகேஸ்வரன் படுகொலைக்கு அமெரிக்கா கடும் கண்டனம்

கொழும்பு,ஜன.4

மகேஸ்வரன் எம்.பியின் கொலைக்கு காரணமானவர்களைத் தாமதமின்றி கைது செய்து நீதியின் முன் நிறுத்துமாறு அமெரிக்கா இலங்கை அரசை கேட்டுள்ளது.

ஜனவரி முதலாம், இரண்டாம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனவரி முதலாம் திகதி மகேஸ்வரன் எம்.பி. படுகொலை செய்யப்பட்டமையை அமெரிக்கா கண்டிக்கின்றது.

மகேஸ்வரனின் குடும்பத்தினருக்கும் அவரது நாடாளுமன்ற சகாக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகேஸ்வரனின் படுகொலைக்கான காரணங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அதற்கு காரணமானவர்களைத் தாமதமின்றி கைதுசெய்து நீதியின் முன் நிறுத்துமாறும் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.

கொழும்பில் ஜனவரி 2ஆம் திகதி இடம்பெற்ற இராணுவத்தினர் உட்பட பலரைக் கொலை செய்து, காயப்படுத்திய - தாக்குதலையும் அமெரிக்கா கண்டிக்கின்றது.

கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் சகல தரப்பையும் பேச்சு மூலமான அரசியல் தீர்வைக் காணுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று உள்ளது. (சி)

## ஒன்றுகூடல்கள்

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமூகசேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (202-288)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.4

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று சங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (202-207)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.ஜன.4

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (202)

* * *

வலி.தென்மேற்கு,ஜன.4

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நடத்தும் விவசாய கருத்தரங்கும் விவசாயிகளுடனான கலந்துரையாடலும் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் சம்மேளன பணிமனையில் நடைபெறவுள்ளன.

சம்மேளனத் தலைவர் சி.பொ.மா.க. முதலியார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.பற்றிக் டிறஞ்சன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், கீரிமலை கமநலச்சேவை நிலைய பிரிவு விவசாய போதனாசியர் திருமதி ப.மணிவர்மன், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் எந்திரி ஏ.சி.வினோதராஜ் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொள்வர். (202-135)

* * *

சுழிபுரம்,ஜன.4

மூளாய் வரதன்புலோ சித்திவிநாயகர் ஆலயத்தில் திருவாசகமுற்றோதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (202-28)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை தினசரி காலை 9 மணி தொடக்கம் பாகவதம் வாசிக்கப்படும். (202)

* * *

கரவெட்டி,ஜன.4

கரவெட்டிப் பிரதேச விளையாட்டு அலுவலர் பாலமுகுந்தன் எழுதிய 'கபடி வரலாறும் விதிமுறைகளும்' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம்.வேதாபரணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரையை கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் வெளியீட்டுரையை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தி.வரததாசனும் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகு பதிவுப் பணிப்பாளர் கே.கணேசநாதனும் நிகழ்த்துவர். (202-70)

# பொங்கலுக்குப் பின்னரே ஆலயம் திறக்கப்படும்

## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயக் குருக்கள் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.4

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மூடப்பட்டிருக்கும் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் தைப்பொங்கல் தினத்திற்குப் பின்னர் உத்தராயணத்தில் லகு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு மீண்டும் வழிபாடுகளுக்காகத் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் குறித்து ஆலய பிரதம குருக்கள் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மகேஸ்வரன் எம்.பி. ஆலயத்திற்குள் வைத்து சுடப்பட்டமையால் ஆலயப் பகுதியில் இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. மற்றும் கொலைச் சம்பவத்தின் பின்னர் படையினரும், பொலிஸாரும் ஆலயத்தினுள் சப்பாத்துக்களுடன் புனிதத் தன்மை கெடும் வகையில் நடமாடினர். இவை காரணமாக ஆலயம் முழுமையாகக் கழுவி துப்புரவு செய்யப்பட்ட பின்னர் வாஸ்து சாந்தி செய்யப்படுதல் வேண்டும்.

அதன் பின்னர் சண்டாள பிராயச்சித்த அபிஷேகமும், ஆலயம் மூடப்பட்ட நாள்களுக்குள் விடுபட்ட ஆறுகாலப் பூஜைகளும் நடத்தப்படல் வேண்டும்.

இவை அனைத்தும் நடைபெற்ற பின்னர் லகு கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்று ஆலயத்தின் பிரதம குரு தெரிவித்திருக்கிறார். (சி)

# 2008இல் உங்களது பலன்கள்...

## மிதுனம்

புத்தாண்டில் உங்கள் ராசிக்குரிய அதிபதி, தைரிய ஸ்தானதிபதியுடனும் களத்ர ஸ்தானாதிபதியுடனும் இணைந்துள்ளார். இவர்களோடு லாபாதிபதி ராசியில் அமர்ந்தும் பாக்யாதிபதி தைரிய ஸ்தானத்தில் வர்கோத்தாம்சம் பெற்று கேது பகவானுடன் இணைந்தும் பஞ்சமாதிபதி விபரீத ராஜயோகம் பெற்றும் இந்த ஆண்டைத் தொடக்குவது சிறப்பு.

இதனால் நீங்கள் பல நாள்களாக அசைபோட்டுக்கொண்டிருந்த கற்பனையைச் செயற்படுத்தி, சோம்பேறித்தனத்திற்கு விடைகொடுக்கும் ஆண்டாக இந்த ஆண்டு பிறக்கிறது. எவரையும் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளாமல் உங்களின் தனித் தன்மை வெளிப்படும் விதத்தில் செயலாற்றுவீர்கள். புதிய மாற்றங்களைக் காண்பீர்கள்.

நண்பர்கள் போல் பழகும் விரோதிகளும் அவர்களின் சதித் திட்டங்களும் உங்களைப் பயமுறுத்தும். என்றாலும் உங்கள் திட்டங்கள் கவனத்துடனும் கருத்துடனும் செயற்படுத்த முனைவீர்கள்.

குடும்பத்தில் சுபகாரியங்களை குருபகவான் நடத்திவைப்பார். பொருளாதார அபிவிருத்தியினால் கடன்களை அடைப்பீர்கள். மேலும் வருங்காலத்திற்கான சேமிப்புகளிலும் கவனம் செலுத்துவீர்கள். குருபகவானின் பார்வை உங்கள் ராசியின் மீது படிவதால் உங்கள் பேச்சில் வசீகரமும் சொல் வன்மையும் உண்டாகும். எதிர்பார்த்த சௌபாக்கியங்கள் உங்களைத் தேடி வரும். அதேசமயம் இந்த ஆண்டு பெரும்பாலான காலங்களில் சர்ப்பக்கிரகங்கள் அனுகூலமற்று உலவுவதால், உங்களின் செயல்களில் ஏதாவது குறை ஏற்பட்டபடியே இருக்கும். மேலும் மனதில் அநாவசிய சஞ்சலங்களையும் குழப்பங்களையும் காண்பீர்கள். என்றாலும் ஆண்டு முழுவதும் குருபகவானும் சனி பகவானும் பலம் பெற்று உலவுவதால் புண்ணிய காரியங்களைச் செய்யுங்கள்.

உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். அதேசமயம் சக ஊழியர்கள் உங்களிடம் சற்றுப் பாராமுகமாகவே நடந்துகொள்வார்கள். அதனால் அவர்களை நம்பி, முக்கிய வேலைகளை ஒப்படைக்கவேண்டாம். மற்றபடி அலுவலக வேலை விஷயமாக நீங்கள் சிறு பயணங்களைச் செய்ய நேரிடலாம். அவை உங்களின் வேலைத் திறமையை அதிகரிக்கும். வியாபாரிகள் அவசியமான பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, வியாபாரத்தைப் பெருக்குவார்கள். கடுமையாக உழைப்பார்கள், காலதாமதமானாலும் இறுதியில் வெற்றியடைவார்கள். பணவரவு நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சுமுகமாகவே முடியும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிக்கும். வங்கிகளிடமிருந்து கடன்கள் கிடைக்கும். நீர் வளத்தால் உங்கள் எண்ணங்கள் பலிதமாகும். புதிய குத்தகைகளால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகளும் வசூலாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். பால் வியாபாரத்திலும் கால் நடைகளாலும் நன்மைகள் உண்டாகும். கலைத்துறையினரின் திறமைகள் பளிச்சிடும். உங்களின் படைப்புகள் மக்களிடம் சரியான முறையில் சென்றடைந்து, வரவேற்புகளைப் பெறும் சக கலைஞர்களால் உங்களுக்கு நன்மைகள் உண்டாகும்.

பெண்மணிகள் குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பார்கள். பணவரவு சீராக இருக்கும். சேமிப்பு விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள். அதேநேரம் உடல் ஆரோக்கியத்திலும் கவனமாக இருக்கவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். மாணவ மணிகளைப் பொறுத்தவரை படிப்பில் ஏற்படும் இடையூறுகளைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். மனதை ஒருநிலைப்படுத்தி படித்து, மதிப்பெண்களை அள்ளுவீர்கள். நண்பர்களும் உங்களுக்[illegible]கள். மற்றபடி விளையாட்டுகளில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறமுடியாமல்போகும். *

# உன்னை நீயே உயர்த்திக்கொள்!

முற்றாத மூங்கிலை எளிதில் வளைக்கலாம். முற்றிய மூங்கிலைப் பலவந்தமாக வளைக்க முயன்றால் ஒடிந்துபோகும். அதுபோல் இளைஞர்களின் மனத்தை இறைவனிடம் செல்லும்படி திருப்புவது எளிது. வயது முதிர்ந்தவனுடைய பழக்கப்படாத மனமோ அப்படித் திருப்ப முயற்சி செய்யும்போதெல்லாம் பிடியை மீறிச்செல்லும்.

ஒருவனின் குணம் அவன் பழகும் மக்களைப் பொறுத்திருக்கிறது. ஒருவன் தன் இயல்புக்கு ஏற்றவர்களோடு நட்புக் கொள்கின்றான்.

தீயவர்களோடு தொடர்புவைத்துக்கொண்டால் மனமும் வாக்கும் கெட்டுப்போய்விடும்.

பணம் எவனுக்கு அடிமையோ, அவன் தான் உண்மையான மனிதன். 'பணத்தை எப்படி உபயோகிப்பது? என்பதைத் தெரிந்துகொள்ளாதவர்கள் 'மனிதர்கள்' என்ற பெயருக்குத் தகுதி உடையவர்கள் அல்லர்.

ஞானக்கதிர்

ஒருவன் உயர்வுபெற விரும்பினால் அடக்கம் உடையவனாக இருக்கவேண்டும்.

பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். அதுபோல் நீ பெருமை அடையவேண்டுமானால் அடக்கமாகவும் பணிவாகவும் இரு.

அவிழ்த்து விடப்பட்ட யானை மரங்களையும் செடிகளையும் வேரோடு பிடுங்கிக்கொண்டு போகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் யானையின் தலையில் குத்தியதும் அது அமைதியாகிவிடுகிறது. அதுபோல் அடக்கி ஆளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகிறது. விவேகம் என்ற அங்குசத்தால் இடிக்கப்பட்டதும் அது அமைதியடைகிறது.

நம்பிக்கை மருத்துவர்கள் நோயாளிகளிடம், "எனக்கு நோயே இல்லை!" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கும்படி ஆலோசனை கூறுகின்றார்கள். நோயாளிகள் அப்படிச் [illegible]படி ஆலோசனை கூறுகின்றார்கள். அதுபோல் நீ அற வாழ்க்கையில் [illegible] உன்னை நினைத்துக்கொண்டால் விரைவில் தாழ்ந்தவனாகி விடுவாய்.

-ஸ்ரீராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### தி.மகேஸ்வரன்

அவர்களின் மறைவினையொட்டி யாழ்.விழிப்புல னற்றோர் சங்கம் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

(69710) **நிர்வாகத்தினர்.**

## மருத்துவமுகாம்

சுழிபுரம்,ஜன.4

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ சேவை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202)


UK Qualification

**HND**

Computing /
Software Engineering /
Business Information Technology
*Duration*: 2 Years (Full Time)

BTEC edexcel INTERNATIONAL

**Applications for the January 2008 intake are now open**

A/L 2007 ?
What Next?

A/L 2007 பரீட்சை பெறுபேறுகள் உங்களுக்கு திருப்தி அழிக்கவில்லையா? கவலையை விடுங்கள்.உங்கள் கனவுகளை நனவாக்கித்தருகின்றோம்.கனவி உலகில் எமது 12 வருடஅனுபவம் நிச்சயம் உங்களுக்கு ஓர் எதிர் காலத்தை தரும்.

Obtain a World Class
**British Qualification**

A/L தகமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission)உயர்கல்விக்கான Visaf;fளைப் பெறுவதிலும் தவறி விடுகின்றனர் சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL,UK வழங்கும் BTEC HND தகைமை உலகில் பிரசித்திபெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதி ஆண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர் கல்விக்கானVisaக்களையும் உறுதிசெய்கின்றது

சிறந்த எதிர் காலத்தை தேடிக்கொள்ள விரும்பும் மாணவர்களே இன்றே எமது அலுவலகத்திற்கு வாருங்கள் வளமான எதிர்காலத்தை நாம் உருவாக்கித்தருகின்றோம்.



BSc.( Hons ) in IT /
BEng. ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia Canada etc.

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk
Web: iiscitycampus.net

"A" Rated centre for quality for the 2nd consecutive year from Edexcel International-UK



## TCT Beauty Centre

மணப்பெண் அலங்காரம் (Facial, Eyebrow, Threading, Waxing), Cake Icing போன்ற அழகு சேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். தொ.பே. 0779067544

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஆதரவுடன் தியாகி அறக்கொடை நிறுவனம் நடத்தும் அழகுக் கலை பயிற்சி (Cake Icing, Flower Making, Facial, Hair Style, Fabric Painting, Handicraft, Dress Making) புதிய வகுப்புகள் ஆரம்பம்.

இடம் : 258, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
ஆரம்பம் : இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை


## 45ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
### வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

(தொழில்நுட்ப உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்)

மண்ணில் 02.01.1957
விண்ணில் 21.11.2002

*நூறுமுறை கூப்பிட்டு நொந்துமே போய்விட்டோம்*
*ஆறுதல் சொல்ல ஏன்வரவில்லை - அப்பா*
*தேறுதல் சொல்ல எமக்கென யாருமில்லை*
*திரும்பியே வாருமப்பா தெருவழியே பார்த்திருப்போம்*

*சிங்கம் போன்ற உங்களின் கம்பீரம்*
*மங்காத புன்சிரிப்பு உங்களுக்கே அளித்தவரம்*
*கங்குல்படவே நீங்கள் வரும் கதவுச் சத்தம்*
*எங்கே அப்பா எதையுமே காணவில்லை*

*நிம்மதியின்றியே நித்தமும் அழுகின்றோம்*
*அம்மாவும் நாங்களுமே ஆதரவு அற்றுவிட்டோம்.*

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.*

கடந்த 21.11.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவால் துயரடைந்த எமக்கு உறுதுணையாக நின்று பல வழிகளிலும் உதவிகள் புரிந்து அனுதாபச் செய்திகள் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு, இன்று (04.01.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபெறுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வரணி இயற்றாலை,
வரணி. (69531)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதி அழைப்பும்



அமரர்
### செல்லையா வீரசிங்கம்

திருநெல்வேலி ப.நோ.கூ.சங்க முன்னாள் முகாமையாளர்

ஆண்டொன்றானது ஆறவில்லை எம்
கனத்த உள்ளத்தின் நினைவுகள்
ஆற்றாமையால் வருந்துகிறோம் ஐயா!
பெற்ற எம்மைச் சீர்காண வைத்துலகில்
சிறப்பித்த செல்வம் நீர்
எளிமையின் தோற்றம் உன் பண்பு
ஏழ்மைக்கு உதவுவது உன் அன்பு
பார் துறந்து எங்குற்றீர்?
பதறுகிறோம் உனை எண்ணி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 21.10.1926
திதி: துவாதசி
மறைவு 17.12.2006

198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8407,
021 222 2435
(69560)

ஐயாவின் பசுமையான நினைவுகளோடு
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BARATHY
## சித்தன்கேணி

நேற்று முன்தினம் வெளிவந்த A/L பரீட்சை முடிவுகளில் எமது நிறுவனத்தில் 3 பாடங்களிலும் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தகுதிபெற்ற மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

**A/L 2010 கலை,வர்த்தகம்**
**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 05.01.2008 சனி**
**இப் பிரதேசத்தின் மிகப் பிரபல்யம் பெற்ற ஆசிரிய குழுவினர்**

| | | |
|---|---|---|
| **பொருளியல்** சுதாகரன் | **கணக்கீடு** முகுந்தன் | **வணிகக்கல்வி** பசில் |
| **தமிழ்** பாலா | **புவியியல்** குமரன் | **அளவையியல்** R.P.சர்மா |
| **இந்து நாகரிகம்** சுரேஸ் | **இந்து சமயம்** தரன் | **அரசியல்** சுகாஷ் |
| **நாடக அரங்** J.சுதன் | **வரலாறு** K.தரன் | **கிறிஸ்தவம்** ஜெபமோகன் |
| **ஆங்கிலம்** நிஷாந்தன் | உங்கள் அனுமதிகளை நாளையிலிருந்து பெற்றுக் கொள்ளவும். | |

குறிப்பு:- இப் பகுதியில் மேற் குறிப்பிட்ட ஆசிரியர்கள் எமது நிறுவனத்தில் மட்டும்தான் கற்பிப்பார்கள்.


# மரண அறிவித்தல்கள்

## ஆசீர்வாதம் பேதுறுப்பிள்ளை

மிருசுவிலை வசிப்பிடமாகவும், 45, 4ஆம் குறுக்குத் தெருவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் பேதுறுப் பிள்ளை நேற்று (03.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் றீற்றம்மாவின் கணவரும், அன்ரன், கியோமர் மரியதாஸ், தவச்செல்வநாயகி (மங்களம்) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற தேவரஞ்சினி மற்றும் J.B. யூட்மரியசெல்வம் (பேதுறுப் பிள்ளை வெதுப்பக முகாமையாளர்) ஆகியோரின் மாமனாரும், சாள்ஸ், எனோச், எமில்டன், றொஷாயினி, றொஷாளினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலய திருப்பலியின் பின் புனித கொஞ்சோஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*45, 4ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
J.B. யூட்

## சின்னையா சுப்பிரமணியம்

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுப்பிரமணியம் நேற்று (03.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பவதியின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்குமார் (பிரான்ஸ்), அசோக்குமார் (பிரான்ஸ்), வனஜா (இத்தாலி), மாலா (பிரான்ஸ்), ஜீவா, அகிலா ஆகியோரின் தந்தையும், செல்வரட்ணம் நிக்ஷனின் (பல்பொருள் வாணிபம்/வீடியோ உரிமையாளர்) மைத்துனரும், தங்கராசா (இத்தாலி), குணேஸ்வரன் (பிரான்ஸ்), சதிஸ்குமார் (கொழும்பு), சுவேந்தி (பிரான்ஸ்), சிவகுமார் (ராஜன் எலக்ரோணிக்ஸ் உரிமையாளர்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு இறுதிக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகுமார்
(ராஜன் எலக்ரோனிக்ஸ், அச்சுவேலி.)

# கண்ணீர் அஞ்சலி

## தியாகராசா மகேஸ்வரன்



(இந்து கலாசார முன்னாள் அமைச்சரும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினரும்)

காரைநகர் மைந்தனாம் மகேஸ்வரன் அவர்களின் மறைவு சைவ உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இவரின் மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை பிரார்த்திக்கிறோம்.

மாணிக்கவாசகர் மடாலயம்
அன்னதான சபை,
ஈழத்து சிதம்பரம்
(சிவன் கோவில்) காரைநகர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை கந்தசாமி

(ஓய்வு பெற்ற விகிதர், யாழ்.கல்விவலயம்)

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் சிவன்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி நேற்று (03.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் லட்சுமிப்பிள்ளையின் (ஓய்வுபெற்று உபஅதிபர், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) கணவரும், யோகாம்பாள் (ஆசிரியை, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ஜெகதாம்பாள் (ஆசிரியை, யாழ்/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) வாலாம்பாள், முருகதாஸ் (லண்டன்) ஆகியோரின் தந்தையாரும், ஈஸ்வரதேவன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், வடமாட்சி கல்வி வலயம்), தவலோகநாதன் (ஆசிரியர், அச்சுவேலி மத்தியகல்லூரி), காலஞ்சென்ற ராஜன் மற்றும் தாரணி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், கோபிதன், பிருந்தன், சிறீஜனா, யதுர்சன், வினுசன், சுவேதா, லக்சிகா, சயிப்தா, சஞ்சுதன், டயாணா, டிலக்சி, கோபிசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணிக்கு பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சிவன் வீதி,*
*ஆவரங்கால்,*
*புத்தூர்.*

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

# மரண அறிவித்தல்கள்

## பரமலிங்கம் உதயகுமாரன் (நயினாதீவு)

(உரிமையாளர், லிங்கன் சேரமிக், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்)



நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.160, சேர்.பொன்.இராமநாதன் வீதி,திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தையும் இலக்கம் 4ஏ, மல்வத்தை குறஸ் வீதி, தெகிவளையையும் வசிப்பிடமாகக் கொண்ட பரமலிங்கம் உதயகுமாரன் நேற்று (03.01.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமலிங்கம் (வர்த்தகர்)-பங்கசாம்பாள் தம்பதியினரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான வித்துவான் குமாரசாமி (முன்னாள் விரிவுரையாளர், கோப் பாய் ஆசிரியர் கலாசாலை)-கனகம்மா (ஆசிரியை) தம்பதியிரின் மருமகனும், வச்சலாவில் கணவரும், ஜனனி (லண்டன்), சிவானி (உயர் தொழில் நுட்பக் கல்லூரி, தெகிவளை), கடம்பன் (HNB, மன்னார்), துவாரகன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), எழினி (இராமநாதன் மகளிர் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் தந்தை யும், நந்தகுமாரன் (கனடா), அருள்மொழி (மட்டக்களப்பு), அன்பு மொழி (ஆசிரியர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), தேன்மொழி (கனடா) ஆகியோரின் சகோதரனும், Dr.சிவகுமாரன் (அமெரிக்கா), சிவநேசன் (லண்டன்), Dr.இளங்கோ (கண்டி), கௌசி (சுவிஸ் லாந்து), வாசுகி (லண்டன்), நந்தினி (கனடா), Dr.தெட்சணா மூர்த்தி (மட்டக்களப்பு), ருக்மணி (கனடா), சத்தியபாலன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். அது பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*160, சேர்.பொன்.இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி. T.P. 0112 736361*

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (கதிரமலை)



மணல்தறை லேன், கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (கதிரமலை) நேற்று (03.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பசுபதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், பூமலரின் கணவரும், வகிதரன் (பழையமாணவன், A/L 2005, சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜினிதா ( A/L 2006 மாணவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சகீதரன் (ஆண்டு 11B, யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், சிவபாலன், தம்பையா, சிவலிங்கம், தங்கச்சியம்மா (கனடா) ஆகியோரின் சகோதரரும், பூபாலசிங்கம் (சுவீடன்), சந்திரபோஸ் (கனடா), சதானந்தபோஸ் (சுவீடன்), சியாமளா (சுவீடன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 44/7, மணல்தறை லேன்,*
*கந்தர்மடம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
செ.கந்தசாமி
(மைத்துனர், கைதடி)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரியும்
த.கெங்காதரனின் அன்பு மாமியார்

## திருமதி செல்லையா தெய்வானைப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு கவலையுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (67717) - கல்லூரிச் சமூகம்

## வலிதென் மேற்கு பிரதேச சபை வரவு செலவுத்திட்டம் - 2008

2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் வலி தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறேன்.

செயலாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.


## ஆனைப்பந்தி ஞானக்குழந்தை இல்லம்

பாலர் பாடசாலை ஆரம்பம்: 07.01.2008
திங்கட்கிழமை காலை 8.00 மணி
முன்பதிவு செய்யவும்.
இடம்: நாவலர் கல்வி நிலையம், பருத்தித் துறை வீதி, ஆனைப்பந்தி, யாழப்பாணம்.
நிர்வாகம்: பாலர் கல்விக் கழகம், 49/5, யாழ். வீதி.


## பங்கீட்டு அட்டை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட கிராம அலுவலர் களி லுள்ள பிரிவு களில் உள்ள சகல குடும்பங்களுக்கு இவ் ஆண்டிற்கான புதிய பங்கீட்டு அட்டைகள் விநியோ கிக்கப்படவுள்ளன.


# Diploma in Hardware Eng.

உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சி!

1st Day Components of Computer
2nd Day Casing & Power Supply
3rd Day Keyboard,Mouse,Floppy Drive, CD ROM Drive, Hard Drive,Printer
4th Day All types of connectors
5th Day Mother board, Processor, RAM
6th Day Expansion cards
7th Day Assembling (vidio)
8th Day Assembling (Practical)
9th Day Connecting Disk Drives
10th Day BIOS & CMOS setup
11th Day Partition, Formating, File types, OS Ins.
12th Day Application Software Ins.
13th Day Add new Hardware
14th Day Monitor

Only 14 days

சகல Diploma சான்றிதழ்களும் Trinity Universityயால் வ்ழங்கப்படுகிறது.




தொடர்புகளுக்கு
சங்கானையில: NORTH LANKA IIT, The Srilankan Center of Trinity University USA, Main Street, Chankanai. 060 2214305
Prof. A. Sanmugadas, Administrative Advisor.
யாழ்ப்பாணத்தில: NEW COLLEGE OF HIGHER STUDIES, No 95, Ariyakulam Junction, Jaffna. Specially for workers .............
சுழிபுரத்தில: Near Kaluvan Junction, Chulipuram.



## புதிய பிரிவுகள் ஆரம்பம்
# aat (srilanka)

Foundation level, Intermediate level & Final
ஆரம்பம்: 06.01.2008(saturday) 8.00am
Medium: English & Tamil
வழமையான விரிவுரைகள் அனைத்தும் 06.01.2008 முதல் நடைபெறும்

External Pharmacist Examination - 2008
மேற்படி பரீட்சைக்கான வகுப்புகள் ஆரம்பம்: 07.01.2008 (sunday)

Further Details:
Director,
Jaffna College Undergraduate Dept,
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.






## பொங்கல் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சன்TV, K.TV, சன் மியூசிக், சன் நியூஸ், சுட்டிTV, கலைஞர்TV, RAJ TV, RAJ TV PLUS, விஜய் TV, மெகா TV, மக்கள் TV, விண் TV உட்பட 180 சனல்கள் வரை கண்டுகளிக்கக் கூடிய DISH.TV பக்கேஜ்கள் மற்றும் கேபிள்TV உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

* DISH.TV க்குரிய கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
* வியாபாரிகளுக்கு சிறப்பு விலைக்கழிவு வழங்கப்படும்.
* ஜனவரி 15 ஆம் திகதிவரை DISH.TV PACKAGE இற்கு மட்டும் இவ்விலைக் கழிவு வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
SATS - TECH ENGINEERS,
இலக்கம் 182, கே.கே.எஸ். வீதி,
(குளப்பிட்டிச் சேச் அருகாமை), கொக்குவில்.
தொலைபேசி: 021 222 5908


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியாகும்

## மார்ச் முற்பகுதியில் வாக்களிப்பு

கொழும்பு, ஜன. 04

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மாநகரசபை உட்பட ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் பெரும்பாலும் இன்றிரவு வெளியாகும் எனத் தெரிய வருகின்றது.

வேட்புமனு ஏற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் மற்றும் பிரசாரத்துக்கான கால எல்லை ஆகியவை முடிவுற்றுப் பெரும்பாலும் மார்ச் முற்பகுதியில் வாக்களிப்பு நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் -

இவற்றுக்கான திகதி விவரங்கள் வர்த்தமானி அச்சாகி நாளை காலையில் வெளியாகும் போது தெரியவரும் எனவும் கூறப்படுகின்றது.

தேர்தல் திணைக்களத்தில் இருந்து உரிய அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றதும் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.கிருஷ்ணானந் தலிங்கம் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழு பிரதிநிதிகளுக்கு விநியோகிப்பதற்கான வேட்புமனுப்பத்திரங்கள் விரைவில் தேர்தல் செயலகத்தில் இருந்து தருவிக்கப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தேர்தல் தொடர்பான முன்அறிவிப்பு வெளியானதையடுத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்திவருகின்றனர். (சி)

# யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருக்கு உடுப்பிட்டியில் நாளை மணிவிழா நிகழ்வு

நெல்லியடி,ஜன.4

அகவை அறுபதைப்பூர்த்தி செய்யும் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளரும்,மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளருமான வே. தி.செல்வரத்தினத்துக்கு வடமாராட்சி கல்வி சமூகத்தினால் நடத்தப்படும் மணி விழா நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறைக் கோட்ட அதிபர் நலன்புரிச் சங்கத்தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. ர.குட்டித்தம்பியும், ஆசியுரையை சிவச்சார்ய பீடாதிபதியும் வல்வை முத்து மாரியம்மன் தேவஸ்தானத்தின் பிரதம குருவுமான சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி கதேசிகர், உடுப்பிட்டி மெதடிஸ்த தேவாலயத்தின் பங்குத்தந்தை. வண. பிதாஏ.தர்ம குலசிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், வடமாகாணத்தின் பிரதி பிரதம கணக்காய்வாளர் நாயகம் சி.சண்முகம், இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் என். சீவரட்ணம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் மாகணக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவர்கள், பிரதேச செயலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் வழங்குவர். (அ-115-160-218)

## 'சித்திரிப்பு எழுத்துக்கள்' நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம்,ஜன.4

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் எழுதிய 'சித்திரிப்பு எழுத்துக்கள்-ஓர் அறிமுகம்' நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்கு பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருள்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ள விழாவில், பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் கௌரவ விருந்தினராக வாழநாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்வர்.

நூல் ஆய்வுரையை யாழ்.பல்கலைக் கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆற்றுவார். (அ-115)

## இளம் குடும்பஸ்தர் சரண்

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளார்.

அளவெட்டி வடக்கு மகாத்மா வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சரணடைந்துள்ளார்.

## அதிபர் கூட்டம்

தென்மராட்சிகல்வி வலயபாடசாலைஅதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும். (1-207)


**பொருளியற் கல்லூரியின் வாழ்த்துக்கள்**

நேற்று முன்தினம் வெளிவந்த A/L 2007 பரீட்சையில் எமது நிறுவனத் தில் கலை, வர்த்தகத் துறைகளில் 3 பாடங்களிலும் அதி உயர் பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்துக்கு தகுதி பெற்றுள்ள அனைத்து மாணவர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், இயக்குநர்,
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம், இணுவில்.

**ஸ்ரீபரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரம தர்மகத்தாக்கள் சபை**

மேற்படி ஆச்சிரமத்திற்கு நன்கொடை தர விரும்பும் மக்கள் ஆச்சிரமத்திற்கு நேரடியாக வந்தோ அல்லது வங்கிக் கணக்குகளுக்கோ பணத்தைஅனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.
குறிப்பு: எக்காரணம் கொண்டும் முகவர்களூடாக பணம் அனுப்ப வேண்டாமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வங்கிக்கணக்கு இல:
மக்கள் வங்கி, நெல்லியடி 2022
இலங்கை வங்கி, நெல்லியடி 7380870

**ஆண் விடுதி மேற்பார்வையாளர் பதவி வெற்றிடம்**

1) தகைமைகள் க.பொ.த (சா/த)சித்தி
2) 50 வயதிற்கு மேற்பட்டவர் நல்லொழுக்கம், முன் அனுபவம் உடையவர்
3) விடுதியில் தங்க வேண்டும்.
4) விண்ணப்ப முடிவுதிகதி 16.01.2008

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
தலைவர், ஸ்ரீபரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி.

தலைவர், தர்மகர்த்தா சபை.

**A/L 2010**

ஆரம்பம் ஜனவரி - 05

கலை, வர்த்தகப் பிரிவு
சனி காலை - 8.00 மணி

கணித, உயிரியல் பிரிவு
சனி மாலை - 3.00 மணி

**நாவலர்**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

**கணக்கீடு**

A/L 2010 — ஆரம்பம் - நாளை

ஆசிரியர்: S.தவா B.Com.(Hons) (Acc.Spl)
1.New Science Hall, Jaffna
2.Universal Tuition Centre
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்.
3.Niru Tuition Centre
கோண்டாவில்.
4.Shamrock Tuition centre
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில்.

நேர அட்டவணை அலுவலகத்தில்

**கணக்கீடு A/L 2010**

ஆரம்பம் - 05.01.2008 சனி 3 மணி
ஆசிரியர்: N.சங்கர் B.Com., H.N.D.A
தேவி அச்சக ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
*தனியாகவோ, குழுவாகவோ உங்கள் வீடுகளிலேயே கற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
T.P. 021- 4591379

**விக்னா கல்வி நிறுவனம்**

ஜனவரி 5 ஆரம்பம்

தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி.யாழ்.
சனிக்கிழமை 8மணி

கிளை நிறுவனம்
417, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
சனிக்கிழமை 7மணி

A/L 2010
கலை, வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| Tam-திரு.B.கஜிகரன் | Com-திரு.யசோ | Acc-திரு.P.பகீரதன் |
| Log- திரு.கமல் | Tam- திரு.குழந்தை | H/C-திரு.பத்மராஜா |
| Geo- திரு.பாபு | Hin-திரு.N.T.தரன் | Hist-திரு.பத்மன் |
| P/Sci-திரு.றொபின்சன் | Chri-திரு.ஜெயமோகன் | Drama-திரு.மயூரன் |

A/L 2008 Day Class கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பம் 07.01.2008 8மணி
தலைமையகம் 52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**ஐடியல் அக்கடமி**

சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய். நீராவியடி, யாழ்ப்பாணம்.

A/L - 2010

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம்
05.01.2008 சனி பிற்பகல் 2 P.M.
இரு நிறுவனங்களிலும் ஒரே ஆசிரிய குழாம்

கலைப் பிரிவு
- தமிழ் — V.M.லிங்கம், A.K.கீர்த்திராஜன்
- இந்துநாகரிகம், இந்துசமயம் — P.சந்திரன்
- நாடகமும் அரங்கியலும் — K.சுதா
- அளவையியல் — E.S.பவன்
- புவியியல் — S.கிருஷ்ணா
- அரசியல் — K.சுகாஷ்
- வரலாறு — K.சுதன்

வர்த்தகப் பிரிவு
- பொருளியல் — S.S.சிறி, S.ராஜ்
- கணக்கீடு — T.சுரேஷ்
- வணிகக்கல்வி — S.ரிஷிகேசன்

கணித, விஞ்ஞானப் பிரிவு
- இரசாயனவியல் — A.தபேசன்
- பௌதிகவியல் — S.கருணானந்தன்
- இணைந்தகணிதம் — S.சிவகரன்
- உயிரியல் — V.S.செல்வன்
- பொது ஆங்கிலம் — V.விஜயபாஸ்கர்
- GIT — N.அம்பி

(69681) கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்.

**SUBRA (14) சித்தன்கேணி**

2010 A/L
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம் 05.01.2008 சனி மாலை 4

**பிறைற்றின் கல்வி நிலையம்**
சங்கத்தானை

A/L 2010, Day Class
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்:- ஜனவரி 5 சனி 10am
தென்மராட்சி முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

- தமிழ் :- பகீரதன்
- வரலாறு :- சுஜீகரன்
- பொருளியல் :- S.S.சிறி
- புவியியல் :- கிருஷ்ணா
- இ.நாகரிகம் :- சுதமதி
- கணக்கீடு :- சயந்தன்
- நாடகமும் அரங்கியலும் :- கார்த்திகேயன்
- வர்த்தகம் :- சஜீவன்

**யாழ்ப்பாணத்தில் வெற்றித்தேர்வு**

திருமலை S. கணேசலிங்கம் அவர்களின்
தரம் : 5-வெற்றித் தேர்வு - 1
நாளை மறுதினம் சகல புத்தகசாலைகளிலும் பெறலாம்.
பரீட்சை எழுதி பெறுபேறு அறிய விரும்புவோர் ஞாயிறு பரீட்சைக்கு தோற்றலாம் மூன்று வசதியான நேரங்களில்
1)காலை: 8மணி 2)காலை 10மணி 3)பி.ப.2மணி
பரீட்சை நடைபெறும் இடங்கள்:
*சயன்ஸ் அக்கடமி - நல்லூர், அரியாலை.
*நிருமதன்ஸ் அக்கடமி - மீசாலை
விவரங்களுக்கு - 021 222 9016
பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உயர்வை மாதாந்தம் மதிப்பீடு செய்ய;
தரம் :4 முதல் O/L வரை
2008இல் 6 பரீட்சைகள் சகல பாடங்களுக்கும்
இன்றே புத்தகசாலைகளில் பதிவு செய்யுங்கள்.
வினாத்தாள் கிடைக்கும் இடங்கள்
*பூபாலசிங்கம் - யாழ்நகர் *துர்க்கா - சுன்னாகம்.
*மொடேன் - நெல்லியடி *நாயகபாலன் - மானிப்பாய்
*விநாயகர் - தாவடி *கமே கிருஷ்ணா - இணுவில்
*துவாரகா - நல்லூர் *குகன் - ஆவரங்கால்
*பாக்கியா - கொக்குவில்சந்தி *மற்ஸ் அக்கடமி - மீசாலை.

**அறிவொளி-NALLUR**

A/L 2010 ஆரம்பம்
05.01.2008 - 3 Pm
Che: அன்பு
Bio: அல்போன்ஸ்
Phy: K.செல்வன்
C.Maths: கண்ணன்
A/L 2010
கலை, வர்த்தக பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

**2010 A/L தமிழ்**
ஆரம்பம் 05.01.2008
By: S.Siva B.A.(Hons)
நேரம் - 1 மணி (சனி)
2008 A/L
ஈழத்து இலக்கிய வரலாறு
ஆரம்பம் - சனி (3.00)
SHAMROCK
ஈச்சமோட்டை.

**A/L 2010**
*கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகள் ஆங்கிலம் G.I.T உட்பட
ஆரம்பம் 05.01.2008 Sat
[நேர அட்டவணை அலுவலகத்தில்]
* Gr. 1 முதல் O/L வரை
* Eng. medium Gr. 6 To 11
* Eng. Literature 10+11
* புலமைப் பரிசில் 5 பரீட்சைகளுடன்
சிங்களம் பிரிவு III
(பேச, எழுத, வாசிக்க)
ஆரம்பம் 05.01.2008 Sat 4.30 Pm
Mr.K.R.ஆரி
SHAMROCK
ஈச்சமோட்டை வீதி, யாழ்.

**MS CENTRE A/L 2010**

கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
5.1.2008 சனிக்கிழமை 4-5 Pm
ஆசிரியர்கள்
- பௌதிகவியல் - திரு.ம.ஸ்பெல்மன்
- இரசாயனவியல் - திரு.ஜெ.ரஞ்சித்குமார்
- இணைந்த கணிதம் - திரு.நா.பிரதீபன்
- உயிரியல் - திரு.க.சுதாகர்

(இடம் - 18, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்)

A/L 2008 PHYSICS
வினாவிடை வகுப்பு
திரு.ம.ஸ்பெல்மன்
ஆரம்பம்
5.1.2008 சனிக்கிழமை 5-6 Pm
[A/L 2007 தோற்றிய மாணவர்களுக்குரியது]
(இடம் - 18, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்)

10 & O/L வகுப்புகள் ஆரம்பம்
5.1.2008 சனிக்கிழமை 4-5 Pm
(இடம் - 18, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்)

**A/L 2010**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
05.01.2008 சனி
தனிப்பட அனுமதி வழங்கப்படும்.
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

**ஞானோதயா அக்கடமி**
கண்டி வீதி, சாவகச்சேரி
A/L 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
05.01.2008 சனி- 9 மணி
வழமையான ஆசிரியர் குழாம்.
நிர்வாகம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org